[illegible]

Chidambaram:—Printed and Published for the Proprietor at the Brahmavidya Press.

[illegible]

ப்ரம்மவித்தியா பத்திரிகை

பிரதி இங்கிலிஷ் ௴ [illegible] சிதம்பரத்திலிருந்து பிரசுரம் செய்யப்படும்.

புத்தகம் - க.] கஅஅசு - [illegible] செப்டம்பர்௴ [illegible] [இலக்கம் - ச.

[illegible]

ப்ரம்மவித்தியா.

ஸம்ஸ்கிருதபாஷை [தொடர்ச்சி]

ஸ்மிருதிகள்.

இவைகளைப்பற்றிப் பலர் பலவிதமாய்ச் சொல்லியிருப்பினும், இதன் வரலாற்றைச் சற்று அறிந்தமட்டில் எழுதுவாம். ஆதியிற் பிரமதேவன் தனக்குப் பரமேசுவரனால் அநுக்கிரகிக்கப்பட்ட சகல வேதங்களையும் ஒருவாறு ஆராய்ந்து, அவற்றுள் அநேகவிடங்களிற் சொல்லப்பட்ட வருணாச்சிரமதருமங்களையெடுத்துச் சுருக்கித் தருமசாஸ்திரம் எனப்பெயர்கொடுத்து ஓர் நூல் இயற்றினர். அதுவே யுகாந்தரங்களில் நடந்தேறிவந்தது. அதுகொண்டே மச்சியபுராணத்தில் [illegible] "புராணமும், தருமசாஸ்திரமும் முதலில் அறிந்துகொண்டவர் பிரமதேவர்" என்று கூறப்பட்டுளது. இத்தருமநூலின் மூலமாகிய வேதங்களையும், மற்றைய புராணங்களையும், தருமநூற்களையும் பரமசிவன் அருளிச்செய்து, பின்பு பிரமதேவனுக்கு உபதேசித்ததாக மாபாரதம் சாந்திபருவத்திற் கூறியது எல்லோரும் காணலாம். [illegible] பின்பு சூலமேந்திய பகவான் சிறிது தியானித்துச் சர்வ சாஸ்திரங்களையும் சிருஷ்டித்தார்; அவை, சிக்ஷை, வியாகரணம், சந்தம், நிருத்தம், சோதிடம், கற்பம், வேதங்கள், மீமாஞ்சை, நியாயம், புராணம், தர்மசாஸ்திரங்கள் என இவை. அவற்றுள் ஒன்றாய தர்மசாஸ்திரம், இப்பொழுதுவழங்கும் தருமசாஸ்திரங்களுக்கு மூலமான பிரமதேவனியற்றிய தருமசாஸ்திரத்திற்கும் முதநூலெனக்கொள்ளற்பாலது. அதன் பின்பு அவரது அம்சமான மும்மூர்த்திகளும், ஒவ்வொரு கற்பங்களிலும் அந்நூலை வெளியிட்டு வந்தனரென்று

[illegible]

ஆசிரியர் பராசரர் கூறியதுகொண்டறிவாம். [illegible] "ஒவ்வொரு கற்பங்களிலும் உற்பத்திநாசங்களுள்ளனவாதலால், மும்மூர்த்திகள் சுருதிகட்கும், ஸ்மிருதிகட்கும், ஆசாரங்களுக்கும் ஆசிரியராவார்கள்" என்று அவரது திருவாக்கு. பின்பு அவ்வக்கற்பத்து நடுக்காலங்களில் அத்தர்மநூற்களை நிலைநாட்டி அவற்றின் தாற்பரியத்திற்கிணங்க ஸ்மிருதிகளையியற்றினவர் மனுமுதலிய முனிவர்களென்றும் [illegible] அம்முனிவரேநன்குவிளக்கினர்.

இக்காலத்துள்ள வைதிக வருணஸ்தருக்குக் குலதனமான ஸ்மிருதிகள் - ௰அ. உபஸ்மிருதிகள் - ௰அ. என்று தெரியவருகின்றன. மூலஸ்மிருதிகளையியற்றினோர் மனு, பிரஹஸ்பதி, தக்ஷன், கௌதமர், யமன், அங்கிரஸ், யோகீசுரர், [யாஞ்ஞவல்கியர்] பிரசேதஸ், சாதாதபர், பராசரர், சம்வர்த்தர், உசனஸ், சங்கர், லிகிதர், அத்திரி, விஷ்ணு, ஆபஸ்தம்பர், ஹாரீதர் இப்பதினெண்முனிவர். உபஸ்மிருதிகளையியற்றினவர் ஜாபாலி, நாசிகேதர், ஸ்கந்தர், லோகாக்ஷி, காசிபர், வியாசர், சநற்குமாரர், சந்தனு, ஜநகர், வியாக்கிரர், காத்தியாயனர், ஜாதுகர்ணர், கபிஞ்சலர், போதாயனர், கணதர், விசுவாமித்திரர், பைடீனசி, கோபிலர் என்னும் இப்பதினெண்முனிவரென்றும் அங்கிரஸ் முதலியோர் கூறியிருக்கின்றனர். மற்றும் சிலர் இவர்களிற்சிலரை மூலஸ்மிருதிகாரரென்றும், இங்கு மூலஸ்மிருதிகாரர்களாய்க் கூறப்பட்ட சிலரை உபஸ்மிருதிகாரரென்று கூறியும், ஆசுவலாயனாசாரியர் முதலிய சிலரையும் மூலஸ்மிருதிகாரர்களென்றும் மொழிவார். இவர்களியற்றிய கிரந்தங்கள் பல இப்பொழுதும் அநேக வித்துவான்களாலுரைசெய்யப்பட்டு வழங்கிவருகின்றன. அவற்றுள் சனற்குமாரர், ஜநகர் முதலிய சிலர் செய்த உபஸ்மிருதிகள் மாத்திரம் அநேகமாயொளித்துப்போனவையே. மற்றவைகளைப் பார்ப்பதரிதல்லவாயினும், அவையெல்லாம் கற்றுணர்ந்து நமக்கு எளிதில் அவ்விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டி மாதவாசாரியார், வைத்திநாததீக்ஷிதர், வைதிகசார்வபௌமரென்னுந்தோழப்பர் முதலிய சிலர் சங்கிரககிரந்தங்களும் செய்திருக்கின்றனர். இவை நமது தேச அரசாக்ஷிக்கும், வருணாச்சிரமங்களுக்கும் ஒரு பெரிய நிதியாய் நமது முன்னோரெல்லாருஞ் சையாடியும், இதுகாறும் அநேகமாய் இந்துக்களுக்குச் சுகாதாரமாயேயிருக்கின்றன. இவ்விதமே ஒவ்வொரு வைதிகர்களும் பொதுவாய் அனுஷ்டிக்குமாறு ஏற்பட்ட இந்தஸ்மிருதிகளைப்போல், ஒவ்வொரு வேதங்களைக்கொண்ட ஒவ்வோர் வகைப் பிராமணதிகளுக்கு வேண்டியபடி அந்தந்தச்சாகையிற் சொல்லிய கருமங்களைக் கற்பசூத்திரங்கள் எடுத்துரைக்கின்றன. அவை பூர்வசூத்திரங்கள், அபரசூத்திரங்கள் என இருவகைப்படுவன. அவற்றுள், பூர்வசூத்திரங்கள் முக்குலத்தவருமனுட்டிக்கவேண்டிய கிரியை, கர்ப்பாதனம் முதலிய சுபகாரியங்களைக்கூறும்; அபரசூத்திரங்கள், ஒருமனிதன் உடல்விட்டுயிர்நீங்கியபின்பு செய்யவேண்டிய கிரியைகளைக்கூறுவன. அப்பூர்வசூத்திரங்கள் - கூ. அபரசூத்திரங்கள் - கூ. பூர்வசூத்திரங்களின் ஆசிரியர்கள் போதாயனர், ஆபஸ்தம்பர், சத்தியாஷாடர், திராஹியாயணர், அகஸ்திய[illegible] சாகலியர், ஆசுவ

[illegible]

லாயனர், சம்பு, காத்தியாயனர் முதலினோர்; அபரசூத்திராசாரியர்கள் வைகானசர், சௌனகர், பாரத்துவாஜர், அக்கினிவேசியர், ஜைமினி, மாதுனியர், மத்தியந்தினர், கௌண்டினியர் கௌஷீதகர் என்பவர்களாம். இவ்விருவகுப்புந்தவிர்த்து இன்னும் கோபிலகிருஹ்யம், சாண்டிலியசூத்திரம் என்பனவும் இத்தேசத்திலிருக்கின்றன. இவற்றுட் பூர்வசூத்திரங்களில் அகஸ்தியர், சாகலியர், சம்பு இவர்களின் சூத்திரங்களும், அபரசூத்திரங்களில் சௌனகர், அக்கினிவேசியர், சைமினி, கௌண்டினியர், கௌஷீதகர் முதலாயினோர் சூத்திரங்களும் இக்காலத்தவரனுஷ்டானங்களிற் காணேம். இவற்றுள் ஆசுவலாயனமும், சௌனகமும் இருக்குவேதத்தைச் சார்ந்த சூத்திரங்கள். போதாயனம், ஆபஸ்தம்பம், சத்தியாஷாடம், காத்தியாயனம், பாரத்துவாஜம், வைகானஸம், மாத்தியந்தனம் என்னும் இச்சூத்திரங்கள் யஜுர்வேதத்தைச் சார்ந்தன. திராஹியாயணம், ஜைமினீயம் இவை சாமவேதத்தைச்சார்ந்தன. மாதுனியம் அதர்வணத்தைச் சார்ந்தது. சில பொதுச் சூத்திரங்களாயுள்ளன. இவற்றிற்கெல்லாம் விசிஷ்டமாயது போதாயன சூத்திரமாதல்பற்றி மற்றையசூத்திரங்களிற் சொல்லாததும் அவசியமானதுமான சிலவிஷயங்கள் அச்சூத்திரத்தைக்கொண்டே மற்றைய சூத்திரகாரர்களும் அனுஷ்டிப்பதுண்டு. இந்த ஸ்மிருதிகள் அநேகமாய்க் காலங்களையுந், தேசங்களையும், நாகரீகத்தையும்பற்றி அவ்வக்காலத்துப் பெரியோர் ஒருங்குசேர்ந்து பரமேசுரனது கட்டளைக்கிணங்க ஏற்படுத்தியது. அதுகொண்டே மனு கிருதயுகதருமத்தைச் சொல்லினரெனவும், கௌதமர் திரேதாயுகதருமங்களைச் சொல்லினரெனவும், சங்கலிகிதர்கள் துவாபரயுகதருமங்களை மொழிந்தனரெனவும், கலியிற் பராசரர் தருமபோதகரெனவும் பராசரர் எழுதியதைக் கண்டுணர்க.

இன்னும் வரும்.

உபந்நியாச சங்கிரகம் [தொடர்ச்சி]

நண்பர்களே! நம்மவர் நன்கு சரீரதத்துவங்களைக் கண்டறியாதவரென்கின்றனர்; சற்றே செவிகொடுங்கள்! ஒருவீட்டில் அநேக வஸ்துக்களை வைத்து ஒரு மனிதனைப் பலதடவை உள்ளே போக வரச்சொல்லியும், மற்றொருவனை வெளியில் நிறுத்தியும் பரீக்ஷிக்கும்பொழுது வெளியிலிருந்தவன் உள்ளே வைத்திருந்த பலவிஷயங்களைச் சொல்லிச் சிலவிஷயங்களை விட அடிக்கடி நுழைந்தவனும் அப்படியே சிலவிஷயம் சொல்லாது விடுவானேல், நமது சிநேகிதர்கள் வெளியில் நின்றவனையே புத்தியுள்ளவனென்றுரைக்க ஐயமுறுவரோ? அவ்வாறு அறுப்புக்குப்பயந்து அரியயோகம்முதலியநூற்பயிற்சிகொண்டு தெளிந்த நமது பூர்வீகர்சொல்லிய விஷயங்களைக் காட்டிலும், எப்பொழுதும் எடுத்தகத்தி கீழேபோடாது பிணங்களைச் சிதைத்தும் இன்னும் சரீரதத்துவங்களை நிச்சயிக்காத இவர்களாலியற்றப்பட்ட நூற்களும் காலக்கொடுமையால் நூற்களாயினவே! கேளுங்கள்! இதுவரையில் உடம்பிலுள்ள குழல்களில் ஓடும்வஸ்து இன்னதென நிச்சயிக்காமலும், இஷ்டம்போனவழி ஒவ்வொருவர் ஒவ்வொரு விதம் எழுதியிருப்பது எல்லோரும் அறியக்கூடியதே! நமது மூக்கிற் சுவாசம் மாறி மாறி ஒவ்வொருமணிக்கு ஒருவழிசெல்வதற்குக் காரணம் நமது யோகநூற்களிற் காணலாமன்றி அவர்கள் சாஸ்திரங்களிற் கிடைக்குமோ? இவர்கள் புதிதாய்க் கண்டுபிடி

[illegible]

த்ததாகச் சொல்லும் நாடிசாஸ்திரம் நமது குலதனமான சுபாலோபநிடதத்திற் காணலாம். உபநிடதங்கள் நூற்றெட்டையும் பார்க்கின் இரத்தவழி, நாடிசுத்தி முதலிய எல்லா விஷயங்களும் நன்கு புலப்படும். இப்படியிருக்கும் நமது மாக்ஷிமைதங்கிய சாஸ்திரங்கள் ஒழிந்துபோகக்காரணம், நம்மவர் வேறுவேறு பாஷைகளைப்படித்தும், நமது பண்டிதரைக் கூட்டத்திற்சேர்க்காது விலக்கிவைத்ததும், அவரும் இவருக்குவேண்டிய சங்கதிகளைச் சொல்லாது கூ - மணிக்குச் சிரார்த்தஞ்செய்யவேண்டுமென்றுற்சரியென்றும், முதற்றினமே ஞாயிற்றுக்கிழமையானுற் செய்யலாமெனவும் சொல்லி எவ்விதத்திலாவது பணம்பிடுங்க யத்தினஞ்செய்தும், படிப்பையொழித்தும், தான் ஏதோ ஒருவிஷயம் கற்றிருந்தும் மற்ற விஷயங்கள் எல்லாவற்றிலும் புகுந்து மனம்போனவழி பிதற்றித்திரிவதுமே.

ஐயா,—இக்காலத்து மகாஜனங்கள் நாகரீகத்துக் குரியதென்றெண்ணியல்லவா விதவாவிவாக முதலிய விஷயங்களை எடுத்துரைக்கின்றனர். இவையெல்லாம் முற்காலத்துப் பெரியோர் நடத்திவந்து பின்பு அதனுல் நேர்ந்த உபத்திரவங்களைப் பொறுக்காது தள்ளிவிட்டார்களென்பது முற்கால சரித்திரங்களான ஸ்மிருதி, புராணம் முதலியவற்றைப் படித்தால் நன்கு அறியக்கூடும். அதில் முற்காலத்தில் ஸ்திரீகளுக்குப் படிப்பிப்பதுண்டு என்றும், புனர்விவாகம் நடந்தது என்னும் மனு கூறிப் பின்பு சிலவற்றை மறுக்கின்றார். ஸ்திரீகளைப் படிப்பிக்க தகப்பன், அல்லது அவனுடன் பிறந்தவன், அல்லது அவள் சகோதரர்களே அதிகாரிகளென்று ஸ்மிருதி விளக்கமாய்ச்சொல்லியிருக்கின்றது. ஆதலால் [illegible] தாய், தகப்பன், பெண்சாதி முதலியவர்களைக் காப்பாற்றவேண்டியது நமது கடமையாதலால், அதற்காக ஏதோ ஒரு பாஷையைக் கற்கினும் நமது குலதனமான பழைய சாஸ்திரங்களை எவ்விதத்திலும் காக்கவேண்டியது அவசியமன்றோ? அதற்குவேண்டி நமது சுபாவத்திலுள்ள மதத்துவேஷங்களைவிட்டு முற்றிலும் ஒற்றுமையடைந்து, தர்மசாஸ்திரங்களில் [illegible] என்றுசொல்லி காக்கைகளிடமும், கொக்குகளிடமும் ஒவ்வொரு குணங்களையெடுக்க உபதேசித்ததை நினைத்து, தற்காலம் நமது தேசத்தையாளும் ஆங்கிலேயரிடம் உள்ள தேசாபிமான மதாபிமானங்களை நன்கு ஆலோசித்துப் பார்த்து, அவ்வாறு நாமும் ஒன்றுபட்டு நமது தேசக்ஷேமத்தை நாடி எங்கும் சபைகளை விருத்திசெய்யவேண்டியது இன்றியமையாது. ஆதலின், இப்பொழுது ஆருவது வருஷபூர்த்தியடையும் சமாஜம் சைவசமாஜமாகையால் வைஷ்ணவர்களுக்குப் பிரயோசனமில்லையென்று கைவிடாமல், ஒருவர்க்கொருவர் ஒத்தாசை செய்துகொண்டே சபைகளைப்பெருக்கி பின்பு எல்லாவற்றையும் ஒன்றுசேர்க்கக்கூடும். ஒவ்வொருசபையின் நிர்வாகிகளும் அநேகசபைகளைச் சேர்ந்திருந்தால், கடைசியில் எல்லாம் ஒன்றாகச்சேர்ந்து நமது தேசத்திற்கு க்ஷேமமுண்டாகவேண்டியவழியைத் தாங்களனைவரும் தேடுவீரென மிக வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்

கு. ஸ்ரீ.

[illegible]

மதமும், அதின் பிரயோசனமும், அதின் ஆசிரியரும்.

[தொடர்ச்சி]

ஸ்ரீமத் பகவத்பாதமுனிவர் இயற்றிய லோகோபகாரமான கிரந்தங்களில் முன்பு சில பாஷியங்களை யெடுத்துரைத்தாம்; இனி மற்றைய கிரந்தங்களையும் இங்ஙனம் விரிப்பாம்.

பாஷியங்கள் உ௰-ம் தவிர்ந்து, பிரபஞ்சசாரம் என்னும் ஓர் பெரிய மந்திரசாஸ்திரமும், உபதேசஸாஹஸ்ரிகை என்னும் ஓர் உபதேசசாஸ்திரமும், (ஆசாரியசுவாமிகள் தமது தாயடிகளுக்கு உபதேசித்தது) இப்பெருநூற்களைக் கற்க வல்லமையற்ற ஏனையோரும் இச்சித்தாந்தநுட்பங்களை எளிதிலறியவேண்டி விவேகசூடாமணி, ஆத்மபோதம், அபரோக்ஷாநுபூதி, ஆத்மாநாத்மவிவேகம், போதாரியை, தசசுலோகி, பிரச்னோத்தர ரத்தினமாலை, மகாவாக்கியரத்தினுவளி முதலிய சிற்சில வேதாந்தச் சிறு புஸ்தகங்களையும், அவற்றிலும் வேருய் மூர்த்திகளிற் பற்றுள்ள சிலரை நோக்கி சிவானந்தலகரி, சிவபுஜங்கம், சிவபாதாதிகேசாந்தஸ்துதி, சிவகேசாதிபாதாந்தஸ்துதி, மிருத்தியுஞ்சயமானஸிகபூசை முதலிய சிவஸ்துதிகளையும், மற்றும் ஹரிமீடே, மோஹமுத்கரம், விஷ்ணுபுஜங்கம், ஹரிகேசாதிபாதாந்தஸ்துதி முதலிய ஹரிஸ்துதிகளையும், சௌந்தரியலகரி, மீனுக்ஷிஸ்துதி, தேவீமானஸிகபூசை, நவரத்தினமாலை, கலியாணவிருஷ்டிஸ்தவம், தேவீபுஜங்கம், பவானீஸ்தோத்திரம் முதலிய பல தேவிஸ்துதிகளையும், கநகதாரை முதலிய இலக்ஷ்மிஸ்தோத்திரங்களையும், சிற்சில ஏனைத்தேவர்களின் ஸ்துதிகளையும் அவர் திருவாய்மலர்ந்தருளியதுண்டு. ஆராயுப்வழி, அவரியற்றிய புஸ்தகங்களின் சங்கை நாம் எடுத்துரைக்க வல்லவரல்லம். அவற்றுள், விசேஷமாய் வழக்கத்திலுள்ள சிலவற்றைமாத்திரம் இங்கு கூறியது அவற்றின் சாரத்தைப் படித்தறியவிரும்பும் சிலரை நோக்கியே. இம்மகான் செய்தருளிய கிரந்தங்களை நன்கு கற்றவர்க்கு இவரதுகொள்கை புலப்படுமாயினும், சிறிது எல்லோரும் அறியும்படி இவ்விடமெடுத்துரைப்பாம்.

இவரது சித்தாந்தம்: ஐம்புலன்களுக்குப் புலப்படும் வஸ்துக்களெல்லாம் அசத்தென்பதும், "பரப்பிரமம்" என்கிற ஒருபொருளொன்றுமே சத்தெனவும், அவ்வஸ்துவின்கண் தோன்றியது இப்பிரபஞ்சமென்றும், இவ்விதமெய்யறிவு ஆசிரியனருளால் வேதமுதலிய பிரமாணநூற்களை யாராயும்வழி யுக்திகளுக்கும் ஒத்ததாய், அனுபவத்திற்கும் இணையாய்ச் சித்திக்குமெனவும், மற்றைய மதங்களும் ஒவ்வொரு அதிகாரிகளைநோக்கிப் பெரியோரியற்றினரெனவும், வியவஹாரத்தில் வருணாச்சிரமதருமங்களுண்டென்றும், தேவர்களுள் மூர்த்திகளுக்குத் தாரதம்மியமிருப்பினும், சிவன், விஷ்ணு, சத்தி (பார்வதி) கணபதி, சூரியன், மகேசுரன் (பரமசிவமூர்த்திகளுள் மகாபைரவமூர்த்தியென்னும் ஓர் மூர்த்தி; காபாலிகரென்னும் ஓர் மதஸ்தர் பூஜிப்பது வழக்கம்) இவர்களை ஆராதிப்பதும் இம்மையினும், மறுமையினும் சுகந்தருமென்றும், சர்வமத சமரசமாய்க் காணப்படுகின்றது. அச்சித்தாந்தம் அவர் காலத்திற்றனே அவருடன் நேரே வாதுபுரிந்த அநேக பெரிய வித்துவான்கள் ஆதரிக்கப் பதம்பெற்று, இப்பரதகண்டத்தில் இதுகாறும் வழங்கிவருகின்றன. அக்காலம் இப்பெரும் சித்தாந்தத்தைக் கையாடினவர் மீமாஞ்சைக்கடலைக் கடந்த

[illegible]

பட்டபாதர், மண்டனமிச்சிரயோகி, முராரிமிச்சிரர், ப்ரபாகரபட்டாசாரியர் முதலியோரும், தர்க்கசாஸ்திர பாஷியகாரரும் நாத்திகமத கோடாலியான நியாயகுசுமாஞ்சலியென்னும் கிரந்தத்தை யெழுதினவருமான ஸ்ரீமான் உதையனுசாரியரும், வியாகரணமாடாடியத்துரைசெய்த கையடரும், மதங்களெல்லாவற்றையுங் கண்டிக்குந்தன்மையாலும், "கண்டன கண்டகாத்தியம்" என்னும் ஓர்பெரியநூ லியற்றியதாலும் கண்டனகாரனென்னும் பெரும்புகழ்பெற்ற ஸ்ரீ ஹர்ஷபண்டிதசார்வபௌமனும் இன்னும் பலரு மென்பது, ஆசாரியசுவாமிகளது சரித்திரங்களாலும், இம்மகான்களியற்றிய கிரந்தங்களாலும் நன்கு விளங்கும். இன்னும் வரும்.

ஆத்மாவும், சரீரமும்.

ஐயா,—நமது நண்பர்களே! சற்றுக் கவனியுங்கள்!!

நமது தேசத்தில் வெகு காலத்திற்குமுன் சார்வாகரென்றும், சத்தபங்கியாதிகளென்றும் இருதிறத்து நாத்திகர்களிருந்தார்கள். அவர்கள் போனமார்க்கங்களெல்லாம் அக்காலத்துதித்த பெரியோர்களால் மறுக்கப்பட்டு, நடுநாட்களில் அப்பெயர் இப்பெரும் பூமண்டலத்தில் மறைந்துபோயிருந்தன. நாம் கேட்டமட்டிலும் ஒரு தேசத்தாராவது சுத்தமாய் நாத்திகத்தை மதமாய்க் கொண்டாடுவதில்லை. எல்லாமதங்களிலும் தத்துவ ஆராய்ச்சியிற் சோம்பலுற்ற சிலர், வெளுத்ததெல்லாம் பாலென்று நினைக்கும் சில பேதைகளைப்போற் கண்டதெல்லாம் சத்தியமென்றும், மேற்கேயுதித்த மகான்கள் கொண்டதெல்லாம் குருவாக்கியமென்றும் நம்புகின்ற இக்காலத்தவருட் சிலரைப்போல் முந்தியும் சிலரிருந்தார்களென்றே கேள்வி. அப்படி அவர்கள்சொல்லும் சித்தாந்தத்தை நமது தேசத்துத் தர்க்கசாஸ்திரிகள் பலவாறுய்க் கண்டித்திருக்கிறார்கள்; அவரவ்வாறு கண்டித்தும், அந்தமதம் இப்பொழுது வளர்ந்துவருவது எல்லோரும் அறிந்தவிஷயமே! பாருங்கள்! நமது தேசத்தில் நாகதாளியென்னும் ஓர்வகைக்கள்ளி வெட்டி வெகு ஆழமானகுழியில் மூட்டம் போடப்பட்டிருந்தபோதிலும், பின்பு சிறிதுகாலஞ்சென்றவுடன் தானே வெகு பலமானவேருடன் கிளம்புவதுபோல், முற்காலத்துப்பெரியோர்களால் வேரறுபட்ட இந்நாத்திகமதம், தற்காலம் அநேக கருவிகளையும் வைத்தியநூற்களையும் துணைக்கருவிகளாய்க் கொண்டு நம்மவரைப் பகட்டிவருகின்றது. அதுவிஷயத்தில் முக்கியமாய் அவருக்கும் நமக்கும் அநேக விஷயங்களுள் விவாதமிருந்தபோதிலும், முதலில் ஓர் கடவுளுண்டென்றும், சரீரத்திற்குவேருய ஜீவன் ஒருவனுண்டென்றும், சுவர்க்கம், நரகம், புண்ணியம், பாவம் இவையுண்டென்றும், நன்குஎதுக்களா லெடுத்துரைக்கவேண்டியது நமக்கு அவசியமாதலால், முக்கியமாய் இதுவிஷயத்தைப்பற்றி முன்பத்திரிகையிலும் இப்பத்திரிகையிலும் தொடர்ந்துவந்த ஓர் உபந்நியாசத்தில் சரீரத்தின் ஓர்பாகமான மூளையென்கிற பொருளுக்கே அறியுந்தன்மை என்று பிறர் கூறுவதை மறுத்து, அதின் வேருய மனதின் தத்துவத்தை விரித்தோம்; இப்பொழுது அம்மனத்துக்கு நாதனுன ஜீவன் என்னும் தத்துவத்தைவிளக்கி, அதற்கும் சரீரத்துக்குமுள்ள வேறுபாட்டையும் இங்ஙனம் சிறிது எடுத்துரைப்பாம்.

[illegible]

இவ்விஷயமாய்ப் பிரதிவாதிகளின் வினுக்கள்.

மதஸ்தர்களே!

க - ஆத்மா என்பது யாது?

உ - உயிர் என்பது யாது?

௩ - மனம் என்பது உண்டா?

௪ - இம்மூன்றுக்கும் ஏதேனும் சம்பந்தமுண்டா?

௫ - ஆத்மா அருபமா? ரூபமுள்ளதா?

௬ - ரூபமுள்ளதாயிற் புலப்படவேண்டும்; அப்படிக்கில்லாவிடில், அருபமாய அவ்வாத்மா இப்பெரியரூபமுள்ள சரீரத்தை எவ்வாறு நடத்தும்?

௭ - அவ்வாத்மா சரீரத்தின் வேருகுங்கால் எப்பொழுது சரீரத்தில் வந்தது?

௮ - எப்பொழுது சரீரத்தை விடும்? எவ்விதம் விட்டு எங்கே போகும்?

௯ - அது போகும்வழி எது?

க0 - அணுவான ஆத்மா பெரிய சரீரத்தை நடத்த எங்ஙனம் வல்லமையுடைத்து?

கக - ஆத்மா சரீரத்தின் வேருமாயின் குழந்தைகளின் அறிவுக்கும், முதியோரறிவுக்கும் வேறுபாட்டுக்குக் காரணம்யாது?

கஉ - சரீரத்திற்கு வேருய் ஜீவனுள்ளதாய் அனுபவமும், வியவகாரமு முண்டா?

க௩ - அது சரீரத்தினும் வேருயிருக்கவேண்டியது அவசியமா?

க௪ - அது அழிவற்றதா? இவை முதலியன.

இவைகளில் ஒவ்வொன்றுய் விரித்து மறுப்பாம்.

முதலில் "ஆத்மா என்பதுயாது?" இக்கேழ்வியின் தாற்பரியம். சரீரத்தில் ஓர்பாகமான மூளைக்கு அறியுந்தன்மை உளதாதலால், அறிவைக்கொண்டு ஆத்மா சித்தித்தல் கூடாதென்பது இதற்கு மறுமொழி. முன் நாம்செய்த உபந்நியாஸத்தில் நன்கு மூளையென்கிற ஓர் சரீரபாகத்திற்கு அறியுந்தன்மை ஒவ்வாதெனவும், அது மனதிற்கு ஒரு ஸ்தானந்தான் எனவும் நன்கு விளக்கினதுமல்லாமல், அதைப்புத்தியுள்ளதெனச்சொல்லும் வழி அநேகவித ஆக்ஷேபங்களையுங்காட்டினேமாகையால் அது பொருந்தாது பற்றி, ஆத்மா என்பது அதிலும், அதாவது சரீரத்திலுள்ள எல்லா உறுப்புகளிலும் வேருயுள்ளதே! அதின் வடிவுயாதெனில், சரீரத்திற் காட்சிப் பிரமாணத்தால், அல்லது அனுமானத்தால் இச்சரீரத்திலுள்ள ஒரு உறுப்பின் குணமாய்,அல்லது வேறுசரீரத்திலுள்ள உறுப்பாய்ப் பொருந்தாதஅறிவே; அவ்வறிவும் பொருளேயொழியக்குணமல்ல. அதின் குணமாய சிற்றறிவையே நம்மவர் கண்டமட்டில் அறிவென்றும், குணமென்றுங்கூறுவர். சூரியன் தானே ஓர் தேயுவாயினும்,அதனது பிரகாசமே சூரியகாந்தத்திற்பட்டு நன்கு நெருப்புப் பொறிகளுடன் வெளியில்வருவதுபோல், அவனது இயற்கையான அறிவு மனமென்னும் ஓர் அணுப்பொருளில், கண்ணுடியிற் பிரதிபிம்பம்போல் பிரதிபிம்பித்து அக்கண்ணுடியிலுள்ள நிறங்களைப் பிரதிபிம்பம் அடைவதுபோலும், சூரியனது பிரதிபிம்பம் சலத்தில் விழின்அச்சலத்தின் அசைவு முதலியவற்றைக் கொள்வது போலும், மனதிலுள்ள அநேக விகற்பங்களையுங் கூடக்கொண்டு இயற்கையறிவிற்கு வெகுவாய் வேற்றுமைப்படும்.

2 - "உயிரென்பதுயாது?" இக்கேழ்வியின் கருத்து. சீவன் உயிர் இவ்விரண்டும் ஒன்றுயிருத்தல் கூடாதா? ஒன்றெனி

௧. [illegible]
௨. [illegible]
௩. [illegible]
௪. [illegible]
௫. [illegible]
௬. [illegible]
[illegible]
௭. [illegible]
௮. [illegible]
௯. [illegible]
௰. [illegible]
௰௧. [illegible]
[illegible]
௰௨. [illegible]
௰௩. [illegible]
௰௪. [illegible]
[illegible]

(௧) [illegible]

(௨) [illegible]

ல், சரீரத்துள்ள ஓர்பூதமாய் வாயுவான உயிர் சீவனாக வேண்டி வரும்; அங்ஙனமாயின், சரீரத்தின் வேறாய சீவன் சித்திப்பது அருமையாய் முடியுமே என்பது கொண்டும்; இரண்டும் வேறாயின், உயிரின் இலக்கணம் யாதென்பதே இதற்குவிடை. உயிரென்பது இச்சரீரத்தில் நிறைந்திருக்கும்ஒருவகை வாயு; இவ்வாயு பலவிடங்களிற் சென்று பலவேலைகளைச்செய்து அநேக தொழிற்பெயரைப் பெற்றுள்ளது. அப்பெயர்கள் பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன், என்பன. இவைகளின் இடம், தொழில்களைப்பற்றி யோகத்திலும் வைத்திய சாஸ்திரங்களிலும் நன்கு காணலாம். ஓரேவாயுவுக்கு இடம், தொழில் இவற்றின் வேறுபாட்டால் எவ்விதம் பலபெயர்கள் ஒவ்வுமெனின்? ஒரே மனிதன்இடம் மாறிவேறிடம் போயிருத்தலாலும், வெவ்வேறு தொழிலைச் செய்வதாலும், அநேக காரணப்பெயர்களையடைந்திருப்பதை நாம் கண்டாமில்லையா? பொதுவாய் சரீரத்திலுள்ள வாயுவுக்கு பிராணன் என்றே ஒருபெயரும் உண்டு. அதுகொண்டே யோகீசுரர் யோககீதையில்([illegible]) "சரீரமெல்லாம் நிறைந்து 12- அங்குலம் அதிகமும் வேகமுமுள்ளது பிராணன்" என்றார். இக்காலத்துவழங்கிவரும்பிச்சைக்கூடை பெருங்கூடையென இன்னார்மகளெனத்தெரியாது வளர்ந்து நம்மவர் எல்லோரையும் வேசிபோற் பேசிமயக்கும்இங்கிலீஷ் பாஷை கற்றவர் அப்பாஷையில் இரண்டிற்கும் (ஸோல்) என்கிற ஒரேவார்த்தை உளதாதலால்வேற்றுமை அறியாதிருக்கிறரே யொழிய, நம்மவர் நூற்களைச் சிறிதேனுங் கற்றவரும் கேட்டவரும் அறியாதார் ஒருவரேனுமிலர். அதுகொண்டே சிலர் தற்கால நாகரீகத்தைப் பார்த்து மனமகிழ்ந்து, நமது முன்னோரியற்றிய சித்தாந்த சாஸ்திரங்களிற் சற்றேனும் செவி கொடாதுவஸ்து விசாரணையிற்சோம்பி நாத்திகமதங்கொண்டு, தமக்குள் தாமே தம்மைப்புகழ்ந்துகொண்டு எல்லாமறிந்தவராய் எண்ணங் கொள்ளுகிறார்கள்; அவரது வார்த்தைகளை நம்பத்தக்கதன்று.

3 -"மனது என்பதுயாது?" இங்ஙனங் கடாவிய கடாவின் உண்மையாதெனில், சரீரத்தில் வேறாயசீவன் அறிவுக்கிடமாயின், மனம் என்பது எதற்கு? இருப்பின், மற்றைய சரீர உறுப்புக்களைநோக்கி அதின் தொழில் என்ன? அதாவது மூளையென்றாலும் பொருந்தாதோ என்பது இதற்குத்தரம்:ஜீவன் அறிவினிடமாய் இருப்பினும் அவனது பேரறிவு இச்சடலத்திலடங்கி யிருப்பதால், மண்குடத்திலுள்ள விளக்குப்போன்றவனாய், மற்றையபொருள்களை அறியத்துணையாய்,ஐம்புலன்களைக் கொண்டிருக்கிறான்; இப்புலன்வழி அவனது அறிவு செல்லுகின்றதுகொண்டு வெளிப்பொருள் உணர்வது உசிதம்; தனித்து அறிவு துணையின்றிஓர் பொருளையுங்கவராது; புலன்களென்கிற துணைக்கருவி அதற்குஅவசியமே! ஆதலால், வெளிப்பொருள்களை உணர வெளிப்புலன்களிருப்பதுபோல், அகப்பொருள்களை அறியுந்துணைக்கருவியாய பொருள்மனது. எங்கும் வியாபித்து உடலெல்லாம் நிறைந்த அறிவு மற்றென்றைக்கவர ஏன் துணைக்கருவி அவாவும் எனின், கூறுவாம். எங்கும் நிறைந்து அணுவணுவாயுள்ள அங்கியனுக்கள் தா

[illegible]

(௩) [illegible]

ன் பிரகாசிக்கவேண்டி ஓர் சிறிய துரும்புமுதலியவற்றைத் துணையாய்க் கொள்ளவேண்டியது அவசியமன்றோ? அது கொண்டு பிரகாசம் முதலிய சக்தி துரும்புக்குக் கிடைக்குமோ? அத்துரும்புபோன்ற துணைக்கருவி மனம்; அதுவே மூளையெனவும் பொருந்தாது. அம்மனமானது சரீரமெங்குஞ் சென்று ஆங்காங்கு சரீர சுகதுக்கங்களை [சரீரத்தின் சரிநிலைமை நிலைத்தப்புகளை]அறிவதாய் இடுப்பில்வலி, காலில்வலி என்று நமக்கு அனுபவமுண்மையால், அசைவற்று ஓர்மூலையிற்கிடக்கும் மூளையாய் அதைச்சொல்வது முற்றிலும்பொருந்தாது.

௪ - "இம்மூன்றுக்கும் ஏதேனும் சம்பந்தமுண்டா?" இக்கேள்வியின் உள்ளம் யாதெனில், ஒவ்வொருவேளை அதிகமாய் மனம் வேலைசெய்தால் ஓய்வு உண்டாகின்றது. பிராணபலன் குன்றினால் [அதாவது பிராணவாயுவுடன் மலசம்பந்தமுண்டானால்] அங்ஙனமே அறிவுகுன்றிவருவதைக் காண்கின்றோம். ஆதலால், இவ்விரண்டின் தொகுதியே மனமெனப் பொருந்தாதோ? பொருந்தாவழி, மனதிலும் பிராணவாயுவிலும் உள்ளகுறைவு எங்ஙனம் ஜீவனிடமொட்டியது? மேலும் சுத்தமாய கண்ணாடிபோன்ற ஒரு நுட்பப்பொருளே மனமென்றும், அதின் ஜீவனது சுத்த அறிவு பிரதிபிம்பித்ததுவே சிற்றறிவு என்றும் முன் சொன்னீர்; ஆதலால் இம்மனம் தன்னிடம் ஓர் வஸ்து பிரதிபிம்பிக்கவேண்டிச் செய்யவேண்டிய முயற்சி யாதும் புலப்படாததால் எவ்விதம் மனம் ஓய்வடையும்? எக்காலமும் ஏதோ ஒருவித அறிவு இருந்துகொண்டே யிருக்கவேண்டியது அவசியமன்றோ? ஓர் கண்ணாடியை ஓரிடம் வைத்தால் அது ஏதேனும் ஒருபொருளைத் தன்னுட்பிரதிபிம்பிக்க வைத்திருக்குமேயொழியத் தனித்திராதல்லவா? ஆதலால், நீர் சொல்லும் மனத்தினிலக்கணம் பொருந்தாது. இங்ஙனம் வினவிய வினாக்களுக்குக் கசடற விடை பகர்ந்து, இவற்றின் சம்பந்தம் இன்னதெனத்துணிதல்கூடாதென்பது இதற்கு விடை. பிராணன் என்கிற காற்றுக்குச் சரீரத்திலுள்ள இரத்தத்தைச் சுத்திசெய்வதும், [சுவாசாசயத்தில் நிரம்பியும் வெளியில் வந்துகொண்டு மிருப்பதால் இருதயஸ்தானம் அடிக்கடி திறக்கவும் மூடவுங் காரணமாதல்பற்றியும், உள்ளத்திலுள்ள மலவாயுக்களை வெளியிற் கொண்டுபோவதாலும் இது இரத்தசுத்திக்குக் காரணமாகுமென்பது கருத்து.] அதனாற் சரீரம் நிலைபெற்று ஜீவன் சுகதுக்கங்களடையக் கருவியாய்நிற்றல்மாத்திரமே தொழிலன்றி, எவ்வித வஸ்துசோதனையினாலாவது அதிற் சிறிதேனும் அறியுந்தன்மை புலப்படா. அங்ஙனமே மனமும், அகப்பொருளறிய முக்கியப்புலனும், வெளிப்பொருளறியத் துணைப்பொருளுமாதலால் அதுவே அறிவெனக் கூறுதல் பொருந்தாது. இவ்விரண்டும் தனியே அசேதனமாயிருப்பது திண்ணம். இவைகளின் சேர்க்கை மூளையென்பதும் ஒவ்வாது. ஆத்மாவின் ஸ்தானங்களைப்பற்றி நிற்கும் மனத்திற்கும், இரத்தாசயப் பக்கங்களைப்பற்றி உதராவரணம் [டையப்ரம் என்று மற்றவரிட்ட பெயர்] வரையிற் சுழன்றுவரும் பிராணனுக்கும் சிறிதேனுஞ் சம்பந்தங்கிடையாது. இவ்விரண்டும் ஒரு சரீரத்திலுள்ளனவாதலால் இவற்றிற்கு ஓர் சரீரத்திலிருத்தலே சம்பந்தமெனின், அது பிரயோசனமற்ற சொன்மாத்திரச் சேர்க்கையேயென்றறிக. ஆதலால் இவ்விரண்டின் தொகுதி புத்தியல்லவெனத் துணியப்பட்டது. [ஆத்மாவின் ஸ்தானம் நான்கு என்

[illegible]

பது முன் உபந்நியாசத்திற் கண்டறிக.] அற்றேல், பிராண வாயுவின்மலமும், மனதின் ஓய்வும் எவ்விதம் ஜீவனது இயற்கையறிவைக்குறைக்குமெனின், தெளியவுரைப்பாம். மனது அசைவுள்ளதாதலால் அதின் வேகம் சிலவேளை அதிகமாகும், சிலவேளை குறுகும், சிலகாலம் அசைவற்று ஆத்மஸ்தானங்களைவிட்டு வேறிடம் உறங்கும். ஐம்புலன்வழி சேர்ந்து வேகமாய்ச்சென்று பொருள்களைக் கவருங்கால் அம்மனதில் ஜீவனது இயற்கையறிவு பிரதிபிம்பிக்க அக்காலத்துணர்ச்சி சாக்கிரமெனப்படும். புலன்கள்வழி புகாது தனித்துத் தன்னுற் கவரப்பட்டுள்ள பற்பல பொருட்களின் வாசனை அல்லது ஞாபகமாத்திரத்துடன் அவ்வாசனைப் பொருட்களைத் தன்னுட் பிரதிபிம்பிக்கும் அறிவுக்கு விஷயமாக்குங்காற் சொப்பனம். அவ்விடத்துப் பொருள் தோற்றமேயொழியப் பொருளில்லை. மறுத்து அம்மனம் அசைவற்றுத் தடத்தமாய்த் தன்னுட் பிரதிபிம்பிக்கும் ஆத்மாவின் இயற்கையறிவொன்றையே அவ்வறிவிற்கு விஷயமாக்கிக்கொண்டு நின்றால் அதே சுழுத்தியெனப்படும். இதுவே மனத்துக்கும் ஆத்மாவுக்கும் உள்ள சம்பந்தம். பிராணபலனாலல்லவா இரத்தம் சுத்தியடையவேண்டுமென்றுரைத்தனம்; அவ்விரத்தம் நன்கு சுத்தியடையாவிடிற் புலன்களுக்குச் சரியான இரத்தம் சம்பந்திக்காததால் அவைகளின் சத்தி மழுங்க அக்கருவிகளைக்கொள்ளும் ஆத்மாவுக்கும் சத்தி குன்றியதுபோலத் தோன்றுமாதலால், இவ்வகை பரம்பரையான சம்பந்தமே இம்முப்பொருளுக்குமெனக் கொள்க.

௫ - "ஆத்மா ரூபமுள்ளதா? இல்லாததா?" என வினவில் அது ரூபம்போன்ற சூக்குமரூபமுடையதே யென்பர் சிலர்; நாம் அரூபமெனவே கொள்வாம்.

௬ - "அஃது ரூபமுள்ளதாயிற் புலப்படவேண்டும், இல்லாவிடத்து அரூபமாய வஸ்து இப்பெரும் உடலை எவ்விதம் நடத்தும்?" அஃது ரூபமுள்ளதாயினும் புலப்படாமலிருக்கக்கூடும் எங்கும் நிறைந்திருக்கும் அணுக்களைப் போன்றது என்றுரைப்பர்; அரூபம் எனினும் அரூபமான நீராவியைப் போலும் [மின்சாரத்தைப்போலும்] இச்சரீரத்தைநடத்த யாதும் தடையின்று.

௭ - "அவ்வாத்துமா சரீரத்தின் வேறுகுங்கால் எப்பொழுது சரீரத்தில் வந்தது?" ௮ - "எப்பொழுது சரீரத்தைவிடும்? எவ்விதம் விட்டு எங்கேபோகும்?", இக்கேள்வியின் கருத்து: சரீரத்திற் சீவன் வருவதும் போவதும், பின்பு இருக்குமிடமும் தெரியாததால், அது முற்றிலும் இல்லையெனக் கோடல் கூடும் என்பது. இதை இவ்விதம் மறுக்க, அவ்வாத்மா கண்கூடாகக் காணக்கூடாத பொருளாதலால் அதின் வரவையும், அதின் போக்கையும், அதின் சொரூபமாய் அதனிடந் தோன்றுமறிவையும், அவ்வறிவின் இன்மையையுங் கொண்டே யறியற்பாலது. அதுகொண்டு கருப்பத்திலுள்ளசிசுவுக்கு ௬-வது ௭-வது மாதங்களில் ஜீவப்பிரவேசம் உண்டாகிறதென்பது அக்காலத்திற்றானே அறிவுதோன்றுதலால் அறிவோம். அது எந்தவழி சரீரத்திற் புகுந்ததெனின்? சரீரத்தில் ஓர் அளவினுடைய காற்று முதலிய வஸ்துக்களே நுழைய நாம் பார்த்திருக்க இவ்வரூபமானவஸ்து பிரவேசித்தல் கூடாதோ? ஆயி

[illegible]

னும் அது உச்சியிலுள்ள அதிசூக்ஷ்மமான ஓர்வழிகொண்டே உட்செல்வதாயும், பின்பு வெளிப்படுங்காலும் அநேகமாய் அதேவழியாய் வெளிப்படுமெனவும் சாஸ்திரங்களின் கருத்து. மூளையென்பது அச்சீவனது முக்கியஸ்தானமாதல் அதில் முதல் வருவதும், கடைசியில் அதேயிடத்தைவிடச் சற்றுவருந்திப் பின்பு விடுவதும் உசிதமாகும்.

இச்சரீரத்தை விட்டு அது போகும் வழியை விஸ்தாரமாய் மற்றொரு உபந்நியாஸத்திற் சொல்லுவோமாயினும், அதின் குணங்களுக்கு அதாவது இருவினைகளுக்கு ஒத்தபடி அவ்வச் சரீரங்களை மறுபடி அடையும். அதற்குப் பிரத்தியக்ஷமான சரீரம்போன்ற மற்றொரு கண்களுக்குப் புலப்படாததான சரீரமுண்டென்பதும் மறு உபந்நியாசத்திற் காணலாம்.

௯ - "அது போகும் வழி எது?", இக்கேள்விக்குப் பதில் அதிலுள்ளஸ்வரூபம் ஞானம்என்னும் ஒளியாதலால், தேயுவெல்லாம் தேயுவின் மூலமான சூரியனை நோக்கிச் செல்வது, அல்லது அச்சூரியகாந்தியின் பிரதிபிம்பத்தையாவது நோக்கிச்செல்வது அதின் சுபாவமாதல்கொண்டே இரவில் மரித்தவன் பிதுர்லோகம்போவானென்றும், பகலிற் சூரியலோகம் போவானென்றும் [அதாவது தேவதைகளுக்கிரவான தக்ஷிணாயனத்தில் மரித்தவன் பிதுர்லோகம் செல்வான்; அவர்கட்குப் பகலான உத்தராயணத்தில் மரித்தவன் சூரியலோகம் சேருவான். பிதுர்லோகம் சந்திரமண்டலமென்றறிக.] சாஸ்திரங்கள் கூறுவது யுத்திக்கும் ஒத்ததே. இது பொதுவிதி. விலக்குகளைப் பின்பு மற்றோருபந்நியாசத்தில் விரிப்பாம்.

இன்னும் வரும்.

(கேழ்விக்குமறுமொழி)

ஐயா,—இரண்டாவது சஞ்சிகையில் வேதங்களின்சாகைகளைப்பகுத்ததில் இருக்குவேதம் சாகை 21- என்றும், யஜுர்வேதம் 101-என்றும், சாமவேதம் 1000-என்றும், அதர்வணவேதம் 9- எனவும் எழுதியிருந்தோம். அதைப்பற்றி நமது நிருபநேசர் ஒருவர் எழுதியதில், இவ்விதப்பகுப்பு முத்திகோபநிடதம் என்கிற உபநிடதத்தில் சொல்லிய சாகைக்கணக்குகளுக்கு விரோதமாய் உள்ளதென்றும் அவ்வுபநிடதத்தில் இருக்குவேதம் சாகைகள்(21) என்றும், யஜுர்வேதம் சாகைகள் (109) என்றும், சாமவேதம் 1000- என்றும், அதர்வணம் 50 என்றுமிருக்கிறதென்றும், சேர்த்துப்பார்க்கில் 49- சாகைகள் குறைத்து எழுதியதற்குப் பிரமாணம் யாது? என்று ஓர் வினா எழும்பியது. அதற்கு விடை கொடுப்பாம்.

ஐயா,—சாஸ்திரிகளே! தாங்கள் எழுதியதைக்கண்டு களித்தேன். அவ்விதம் இருப்பது உண்மைதான். ஆயினும் 1180 சாகைகள் என்று பிரித்ததுபோலவே வியாகரணமாபாடியகாரராய பதஞ்சலிமுனிவர் நாம் முன்னுரைத்தபடி 1131 என்று குறித்திருக்கிறார். அவர் வாக்கியமாய் இருப்பினும் வேதவிலக்கணவாக்கியமாதலால் நம்பத்தக்கதே. அதற்குக்காரணம் அவர் கண்டுபிடித்ததில் ஒவ்வோர் சாகைகளில் மற்றொன்றைச்சேர்க்கலாமெனக்கருதிச் சில சாகைகளைக் குறைத்தார் என்றே நம்பற்பாலது. அதுகொண்டே சிலர் வேதங்கள் நான்கு என்பதும், சில விடத்து மூன்றன் தொகுதியெனப்பொரு

[illegible]

ப்ரஸ்னஸ்ய ப்ரதிவசநம்

[illegible]

ள் கொள்ளும் திரயீ என்கிற சொல்லாலும் விவகரிப்பது அவ்விதமே 63000 எலும்புகள் மனிதனுக்குண்டென்று வேதங்கள் கூறுவனவென்றும், சல்லியதந்திரத்தில் 300 தான்உள்ளதென வென்றும் தன்வந்தரிபகவான் கூறியது பொருள் படுத்தவேண்டும். சூக்ஷ்மமாய்ப்பார்த்தல் அரிதென அவர்கொள்கை. இல்லாவிடில வேதங்கள் அனந்தமென்னும் வாக்கியமும் அதுவும் எவ்விதம் முரணுதவழி பொருள் படும்.

கடிதங்கள்.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் என்கிற ஸ்ரீநிவாஸரே! "சம்ஸ்கிருதம் தமிழ்,, என்கிற இராம லட்சுமணர்களை ஆசரித்து வாழ்ந்த "இந்துக்களென்கிற,, சைனியங்கள் அசுரர்களென்கிற "புறச்சமயிகளாலே,, ஏவப்பட்ட, "நாகபாசம் என்கிற,, [illegible]மதபோதனைகளால் மரணமூர்ச்சையென்கிற மகாமயக்கமடைந்து, தங்கள் தலைவர்களையு மறந்திருக்குந் தறுவாயில், "ஸ்ரீநிவாசன் என்கிற,, நாராயணமூர்த்தியாகிய தங்களால் ஏவப்பட்ட "கருடபகவான்,, என்கிற ப்ரம்மவித்தியா பத்திரிகையானது வட்டமிட்டுழலாநிற்க, ஷ சைனியங்களாகிய நம்மவர் இப்போது சற்றே தலைநிமிர்ந்து கண்விழிக்கக்கண்டு, நாமடைந்த சந்தோஷம்கரைகடந்தன. விரைவிலே யானுங் கையொப்பஞ்செய்யவும், பலருக்கும் அதன் மேன்மையைப் போதிக்கவும் சித்தமாயிருக்கிறேன். அநிற்க.

குதர்க்காசல குலிசம்.

கோயமுத்தூரிலே மூன்றுமாதமுந்தி எனக்கும் ஒரு உத்தியோகஸ்தருக்கும் விபூதிதாரணவிஷயமாய் சில விவாதங்களுண்டாகி, அதுவிஷயம் சென்னை "ஸ்ரீ சுதேசாபிமானியில்,, வெளியிட்டிருந்தேன். அதுகண்ட "நன்மைவிரும்பி,, என்கிற ஒருவர் "வேலூர் ஜநாநுகூலநி,, யில் வாலுந்தலையுமில்லாத சில போலிவசனங்களையும், பிரேதகிர்த்திய சமயங்களில் புண்டரதாரணத்தை நிஷேதித்துள்ள இரண்டொரு வசனங்களையுமே பேராதரவாய்க்கொண்டு, பஸ்மதாரணத்தையும், எம்மையும் பலவாறு நிந்தித்திருக்கிறார். பஸ்மத்தை நிந்தித்தாரேயன்றித் தாமணிந்துகொள்ளுகிற வெள்ளைமண், மஞ்சட்பொடி முதலியவைகளுக்கு ஆதாரமாக வேதோபநிஷத்துகளில் ஓரெழுத்தேனுங்காட்டி நாட்டிக்கொண்டாரில்லை. நாம் இவரைக் கண்டிக்கப்புகுவதும், அவைதிகராகிய இவருக்கு வேதோபநிஷத்து ரகஸ்யார்த்தங்களை வெளியிடுவதும், அநுசிதமாயிருந்தபோதிலும் அவரெழுதியிருக்கிற குதர்க்கத்தினால் கலக்கமடைந்த வைதிக உத்தமர்களைச் சந்தோஷிப்பிக்குமாறே எமது பிரவர்த்தகம் உசிதமாயிற்று. வருவனவற்றை வேதமணங்கமழும் தங்கள் பத்திரிகையிற் பிரகாசப்படுத்தக் கோருகிறேன்.

டஸ்மஜாபாலம், மஹாதேவப்ரஸ்னடஸம்வாதத்தில் "[illegible]

[illegible]

[illegible]

பத்ரம்

[illegible]

[illegible]" என்னும் வசனத்தால் பிரமாதமன்றியில் பஸ்மதாரணஞ் செய்யத்தக்கதென்றும், பிரமாதத்தாலாயின் பதிதனுகிறுனென்றும் வெளிப்பட்டது. இன்னும், வருமாறுணர்க. [illegible]" என்று பெறப்பட்ட வசனங்களால் பஸ்மதாரணஞ் செய்துகொள்ளாமல், ஜலத்தையாவது அன்னத்தையாவது, வேறு எதையாவது, ஆகாரஞ் செய்யக்கூடாது. பிரமாதத்தால் பஸ்மதாரணத்தைத் தள்ளி காயத்திரியை ஜபிக்கக்கூடாது. ஹோமஞ் செய்யக்கூடாது. தேவ ரிஷி பிதிர் தர்ப்பணங்களையும் பஸ்மதாரணமன்றியில் செய்யக்கூடாது. இதுவே சநாதனமான தர்மம். ஸர்வ பாபத்தையும் நசிப்பிப்பதும் மோட்சஹேதுவும் நித்தியமுமாகும் இந்த தர்மம், பிராமணர்களுக்கும் பிரமசாரி கிருகஸ்தன் வானப்பிரஸ்தன் சந்நியாசியென்கிற நாலு ஆச்சிரமிகளுக்கும், முக்கியமாயுள்ளது. இதைச் செய்யாவிட்டாற் பிரத்திபவாயமுண்டு. பிராமணன் பிரமாதத்தா லிந்தத் தர்மத்தைச் செய்யாதிருந்தால் அதற்குப் பிராயச்சித்தமாக ஜலமத்தியிலிருந்து நூற்றெட்டுக் காயத்திரி ஜபஞ்செய்து, அநேகமுபவாசமிருந்து சுத்தனுவான். சந்நியாசியானவன் ஒருக்கால் பஸ்மதாரணத்தைத் தள்ளுவானுகில் உபவாசமிருந்து பன்னிரண்டாயிரம் பிரணவ ஜபஞ்செய்து, சுத்தனுவான் என்று பெறப்பட்டது.

இன்னும், பிரஹஜ்ஜாபாலோபநிஷத்தில் "[illegible]" இ—ள். எந்தப் பிராம்மணனால் சிரசில் பஸ்மத்தினால் திரிபுண்டரதாரணஞ் செய்யப்பட்டதோ, அவனால் சர்வமும் அத்தியயனஞ் செய்யப்பட்டனவாம்; சர்வமும் சிரவணம் செய்யப்பட்டனவாம்; சர்வமும் அநுஷ்டிக்கப் பட்டனவாமென்று அறிக. தங்கள் விஷ்ணுவுக்கே விபூதி ருத்திராக்ஷங்கள் தாரணப்பொருளானதை யுணராமல் நிந்திக்கவந்த "நன்மைவிரும்பி" கொடியர்! கொடியர்!! அவ்வுண்மை பின்பு காட்டுவாம்.

வரும்.

ஓர் வைணவன்.

ஓர் வேதபாடசாலை.

ஐயா,—கூடலூருக்கருகில் விளங்கிவரும் திருவகேந்திரபுரம் என்னும் கிராமத்தில் "சிரந்தனட்ணிநிநிலயம்" எனப்பெய

[illegible]

ர்பெற்று விளங்காநின்ற வேதபாடசாலையில், ௧0- வித்தியார்த்திகள் வேதாத்தியயனம் செய்துவருகிறார்கள். அவ்வூரில், அதிதிகளாய் வரும் அந்தணர்களுக்கு அன்னதானமளிப்பதினால் மிகுந்த கீர்த்திபெற்றவரும், நல்லொழுக்கமுள்ளவரும், தர்மமே நிச்சயமெனக் கோரிக்கையுள்ளவருமான "கைங்கரியம் வேதாந்தராமாநுஜர்" எனத் திருநாமம்பெற்ற ஓர் கனவான் விளங்கிவருகிறார். அக்கனவான் சென்ற ஆவணிமீ பௌர்ணமியன்று, அப்பாடசாலையில் அத்தியயனம் செய்துவரும் வித்தியார்த்திகளைப் பரீக்ஷை செய்தார். அப்பரீக்ஷையில் முதல் தரமாய்த் தேறியவர்களுக்கு ரூபா ௫-ம், இரண்டாந்தரமாய்த் தேறியவர்களுக்கு ரூபா ௪௨-யும், மூன்றாந்தரமாய்த் தேறியவர்களுக்கு ரூபா ௪-ம், இவ்விதமே வித்தியார்த்திகளனைவர்க்கும் ரூபாயாக வெகுமதி கொடுத்ததுமன்றி, ஒவ்வொருவர்க்கும் தரித்துக்கொள்ள இரண்டு வஸ்திரங்களும் வெகுமதியாகக் கொடுத்தார். இக்கனவானுடைய தயாளகுணத்தையும், வேதவித்தையிலிருக்கிற விசுவாசத்தையும் கண்டு, அக்காலத்தில் வந்திருந்த சபையோர்களும் இதைக்கேட்ட மற்றுமனைவரும் களித்துத் துதித்தார்கள் அன்றியும் அக்கனவான், அந்தப் பாடசாலை உபாத்தியாயரும் அங்கத்துடன் யஜுர்வேதம் முழுவதும் கற்றவரும் எப்பொழுதும் தேவநாயகனது கைங்கரியத்தில் மிக ஆவலுள்ளவருமான பரிமளரெங்காசாரியாருக்கு ரூபா ௲௫-வெகுமதியளித்தார். இவ்விதமே நம்மவர்கள் அவரவர்களுக்குத் தக்கபடி நம்முடைய மதத்தின்விஷயமாய்ப் பொருளுதவி செய்வாரேல், நமது மதம் விருத்தியடையத் தடையென்ன? இவ்விதங்களில் பணத்தைச் செலவிடாது எவர் பணத்தை வீணிற் காப்பாற்றுவரோ, அவர் அரண்மனைகளில் யானைமுதலியவற்றைக் காப்பவருக்கு ஒப்பாவார். அவ்விதப் பொருள்களால் அவரே தனவான்களாயின், நாமும் அரசனது பொக்கிஷத்தைநோக்கித் தனவானென்பதில் யாது தடை? இவ்விருவகைப் பணத்தையும் அனுபவிப்பதில் இருவரும் சமானரே! ஆயினும், அப்பணம் சிறிது செலவானால் அவ்விதலோபிகள் மனவருத்தங் கொள்வார்; நாமோ அரசன் கோசம் அழிந்தாலும் விசனங்கொள்ளோம். இதுவே அவருக்கும் நமக்கும் உள்ள வேற்றுமை. ஆதல்கொண்டு, கனவான்களே! நாமல்லவோ பணங்களைத் தேடுகிறோம். அவற்றை விருத்திக்குக் கொணர்ந்து, எவ்விதத்திலும் நல்லகாரியங்களில் நன்கொடையளிப்பீராக. அப்படிக்கில்லாத தனம் அரசர்பாற் செல்வது கண்டிருப்பதே.

மொழி பெயர்ப்பு.

வேதபாடசாலை விருத்தி விரும்புவோன்.

சிதம்பரம்

சித்விலாசினீ பாடசாலை.

இச்சிறப்புற்றோங்கிய சிதம்பரக்ஷேத்திரத்தில். "சித்விலாசினீ,, என்கிற ஸம்ஸ்கிருத பாடசாலை ஒன்றிருக்கிறதாய் முன்னமே ஒருவாறு எழுதினோம். அம்மடந்தை தனக்கிசைந்த "ப்ரம்ம வித்தை,, என்னும் தோழியை அடிக்கடி அணைந்து அப்பாவாய் மனங்குளிரச் செய்துவருகின்றனள். எக்காலம் இப்பெண்ணை அநேகம் பிராமணர்கள் முன்னிலையில் ஸ்ரீமான் தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகள் கைக்கொண்டனரோ, அதுமுதலிதுகாறும் ஸவரஸம் நிரம்ப நாநாலங்கார பூரிதையாய், கனி

[illegible]

ணங்களாகா; அப்பிரமாணங்களெனில், முற்றிலும் அப்பிரமாணங்களல்ல. சில அதிகாரிகளை நோக்கிய பிரமாணங்களே- "ஸ்மிருதியில் அல்லது புராணத்தில் வேதவிருத்தமான பாகமிருப்பின் அது தாந்திரிகம்,, என்னும் வசனப்படிக்குத்தாந்திரிகர்களை நோக்கி அது எழுதப்பட்டதாய் அறியவேண்டியது. உலகத்தில் எல்லோருக்கும் தருமஞ்சொல்லப்புகுந்த இந்நூற்களுக்கு அப்படியிருப்பதும் அழகே. அதில் தருமம் சத்துக்கள் ஒப்பத்தக்கது. அங்ஙனமில்லாதது அதர்மம் என்று இலக்கணங் கூறப்பட்டது. அங்ஙனம் ஆபஸ்தம்பர் தர்மவிலக்கணமுரைத்தனர். "எவ்விதம் செய்யின் பெரியோர் புகழ்வரோ அதுவே தர்மம்; எதை வெறுப்பரோ அதுவே அதர்மம்.,, இவ்விடத்துப் பெரியோரெனப்படுபவர் வேதங்களையறிந்த வித்துவான்களே. அங்ஙனமே "நான்கு பெயர்கள் அல்லது மூன்றுபெயர்கள் வேதங்களைக் கற்றவராயின் அவர் எதைச்சொல்வரோ அதுவே தர்மம்; மற்றவர் ஆயிரம்பெயராயினும் அவர்சொல் பயன்படா,, என்று மற்றோரிடத்துக் காணப்படுவதால் நல்ல வைதிகர்களில்லாத பெருங்கூட்டம் இவைகளைமாற்ற வல்லமையற்றதெனக் கொள்ளலாச்சுது. இத்தருமம் செழிக்கவேண்டி, அதைப் பெருக்கப் பலகாரணங்களை யாஞ்ஞவல்கிய முனிவர் குறித்தனர் அஃதெங்ஙனமெனில் "தேசம், காலம், உபாயம், சிரத்தையுடன்கூடிய திரவியம், பாத்திரத்தில் தானம் இவை சேர்ந்து தர்மவிலக்கணம்,, எனப்படும். இவற்றுள் தேசம் குருக்ஷேத்திரந் தொடங்கிய க்ஷேத்திரங்கள்; காலம் சந்திரகிரகணம் சூரியகிரகணம் முதலியன; உபாயம் சாஸ்திரங்களிற்சொன்ன தருமவழி; பஞ்சகவ்வியம் முதலியன திரவியம்; சிரத்தையென்பது ஆத்திகம்; அதாவது கடவுள் உண்டென்னுந்துணிவு. சற்பாத்திரதானம். இவ்வைந்துவகைகளாலும்தருமத்தைபபெருக்கி உலகத்தை அநுசரித்துத் தன் வருணத்துக்குரிய தர்மங்களைச் செய்பவன் பேரானந்தமடையக் கருவிகளாய் இவைநின்றுள்ளன. இஸ்மிருதிகள் வேதங்களுக்கடுத்த பிரமாணங்களாய் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. இவைகள் நிரம்பியிருப்பதும் இப்பாஷைக்கு ஓர் பேராபரணமென்பது திண்ணம்.

புராணம்

புராணமென்பது முன்னரே நாம் கூறிய பதினெண் வித்தைகளில் ஒன்றும், இப்பரதகண்டத்திலுள்ள வைதிகர்கள் அனைவராலும் ஒருமனதாய் வேதங்களைட் பொருள்செய்யக்கருவியென ஒப்புக்கொள்ளப்பட்டதுமானது. அதனிலக்கணம் சிருஷ்டி, ஸம்ஹாரம், வம்சகிரமம், மனுவந்தரங்களின் சரித்திரம், வம்சசரித்திரம் முதலிய பலவிஷயங்களைச்சொல்லித் தத்துவத்தை நன்கு விளக்கும் நூல் என்பது. இப்புராணங்கள் சுருதி ஸ்மிருதிகளைப்போல ஏதேனும் ஒருவிஷயத்தைத்தானே விதிப்பதுமில்லை; விலக்குவதுமில்லை. பற்பல சரித்திரங்களின் வாயிலாக வேதங்களின் உண்மையான கருத்தை வெளியிட்டு விதி விலக்குகளைக் காட்டுவன. வேதங்கள் பலவாயுள்ளனவும், அவற்றைப் பொருட்படுத்த மீமாஞ்சைமுதலிய கருவிகள் வேண்டியும், அவற்றைக் கற்க ஆயுள்பலமும் மதியூக்கமும் மிக வேண்டுமெனக்கருதி, மந்தாதிகாரிகட்கும் தத்துவம் எளிதில் விளங்கப் புராணங்கள் பரமகிருபாநிதியாய

[illegible]

பரமனு லியற்றப்பட்டன என்று பல ரிஷிகளின் கருத்[illegible] "குறைந்த அறிவுடைய ஒருவனைக்கண்ட வேதம் நம்மை இ[illegible]ன் வேறு பொருள்படுத்திக் கெடுப்பான் என்று நடுங்கும்; அ[illegible] படிக்கெடுக்காது இதிகாசங்களையும் புராணங்களையும் து[illegible] நூலாய்க்கொண்டு வேதங்களைப் பொருள்படுத்துக" என்[illegible] இவ்வாறு எழுதியிருப்பதால் விளங்குகின்றது. அப்புராண[illegible]கள் அநேகமாதலால் அவற்றின் சொரூபம் சிலது இவ்விட[illegible]ரைப்பாம். இப்புராணங்களை ஆதிகாலத்தில் வேதங்களுட[illegible] கூடவே பகவான் பிரமதேவனுக்குக் கட்டளையிட்டருளினா[illegible]. அவர் பின்பு உலகத்தைச் சிருஷ்டிக்க எத்தனித்து முதலி[illegible] புராணங்களை நினைத்தார்; பின்பு தரும சாஸ்திரங்களைய[illegible] வேதங்களையும் நினைத்துப்பார்த்தார் என்பதுகொண்டு, பிர[illegible]மன் முதலில் மற்றவருக்கு வெளியிட்டானதலால் இதற்குப் பிராமம் என்கிற பெயர் ஒன்று கிடைத்தது. அவற்றின் கிர[illegible]ந்த சங்கியை ௱-கோடிகள். பின்பு அவ்வளவு பருத்த புஸ்[illegible]தகத்தைப் படிக்க ஜனங்களுக்கு வலிமைகுன்றியதைக் கண்டு ஒவ்வொரு கற்ப சரித்திரங்களுடைய ஒவ்வொரு புராணத்தை[illegible] ப் பிரமன் முதலிய பதினெண்முனிவர் ஒருகோடி கிரந்த[illegible] தாற் சங்கிரகித்து வெளியிட்டுவந்தனர். பின்பு அதையும் கற்பது அரிதெனக்கருதிக் கருணைக்கடலாய வாதராயணமு[illegible]னி வர் நாலுலக்ஷங் கிரந்தங்களாக்கிப் பதினெண்புராணங்களாய் வெளியிட்டார். இவ்விஷயம் மாச்சியத்திலும் மற்றைய புரா[illegible]ணங்களிலுமுள்ளது. [illegible] என்றும் [illegible] என்றும் சாண்க. இக்காலத்துள்ள புராண[illegible] அவையாவன பிராமம், பாதுமம், வைணவம், [illegible]சைவம், பாகவதம், பவிஷியம், நாரதீயம், மார்க்கண்டே[illegible] ஆக்கினேயம், பிரமகைவர்தம், இலிங்கம், வராகம், [illegible]ந்தம், வாமனம், கூர்மம், மாச்சியம், காருடம், பிரமா[illegible]ம் என[illegible]பன. இவைகளிற் பல வேறுபாடுகளுள்ளனவெ[illegible] சிலர் சொல்வதுண்டு. நாம் ஒருவிதத்திலும் இவற்[illegible] தோஷங்களுண்டெனச் சொல்லோம். இதுவிஷயம் [illegible] வாதிகள் இருதிறத்தார் சிலர் சொல்வது. ஒன்றுக்கொன்[illegible]ராதமாய பல சரித்திரங்களையும், பல தேவதைகளின் [illegible]மையையும் வெளியிடும் இப்புராணங்கள் முற்றிலும் பிர[illegible]ங்க[illegible]கா வென்பார். மற்றும் சிலர் தமக்குவேண்டிய சி[illegible]றைப் பிரமாணங்களெனக்கொண்டு, மற்றவை அப்[illegible]ணமெனக் கொண்டுவருவார்கள். இவ்விருதிறத்தார் வ[illegible]களையும் நன்

[illegible]

கு விளக்கிப் பின்பு எல்லாப் புராணங்களையும் பிரமாணமாய்க் கொள்ளும்வழியும், அதற்கேற்றபிரமாணங்களும் எடுத்துக்காட்டுவாம். இவர்களில் முதல்வகுப்பு பிரதிவாதிகள் சொல்வது:—இப்புராணங்களை இயற்றினோர் சில அந்தணர்களே; வயிற்றுப்பிழைப்புக்கென வியற்றினரென்றறியக்கூடும். ஏனெனில், இதிற் பலவிடத்தில் பிராமணபூசையே எழுதியிருப்பதன்றி வேறொன்றுமில்லை. இவற்றையியற்றினோர் வாதராயணமுனிவராவரேல் அவர் இப்படிச் செய்வாரா? மற்றும், இதிற் பலவிடத்துத் தத்துவங்களைப் பற்றியும் வெகு அதிவாதங்களுடன் எழுதப்பட்டுள்ளன. அவை வருமாறுகாண்க.

காந்தம், வைணவம், பாகவதம் முதலிய புராணங்களிற் பூகோளம், வானசாஸ்திரங்கள் இவைகள் எழுதியிருப்பது முற்றிலும் ஆராய்ச்சிக்கு விரோதமாயிருப்பதுமன்றிச் சிறிதேனும் சர்வமுமறிந்த முனிவர் எழுதியதாய் நம்ப இடங்கொடுக்கமாட்டாது. மற்றும், ஒவ்வோரிடத்து ஒவ்வொரு தேவதைகளை அதாவது பிரமன், விண்டு, உருத்திரன் இவர்களுள் ஒவ்வொருவரை மற்றொருவர் உண்டாக்கினதாயும், அவர் மற்றவருக்கு அடங்கி அவரை வழிபடுவாரென்றும் முன்பின் விரோதமாய் எழுதியிருப்பதும், ஒவ்வொரு கர்மங்களைப்பற்றிச் சொல்லும்பொழுது அக்கர்மம் ஒன்றே மனிதர்க்கு முத்தியளிக்குமெனக்கூறி, மற்றக் கருமத்தைச் சொல்லும்வழி இக்கருமம்போன்ற கருமம் உலகத்திலில்லை, இதுவே எல்லாவற்றிலும் சிறந்தது எனவும் தாறுமாறுயுள்ளதும் காணலாம். அநேகமாய்ச் சரித்திரங்களும் ஒரு புராணத்திற் கண்டபடி மற்றொரு புராணத்திற் காணப்படுவதில்லையாதலால், உண்மை விளக்கத் தோன்றினவல்லவென்பது திண்ணம். இதுகொண்டே நமது முன்னோர்களிற் சிலரும் புராணங்களைவிட்டு வேதவாக்கியங்களாலேதான் தத்துவம் வெளியாகுமென்றுரைத்தனர். ஆதல்கொண்டே வேதத்திலும் "அப்பொருளை அருமறைமொழிகளால் அந்தணர்கள் அறியவிரும்புவார்கள்" என்றும் "வேதவாக்கியங்களாற்றான் அப்பொருள் அறியற்பாலது" எனவும் பல வசனங்களுள. ஆகையால், நாம் புராணங்களை முற்றிலும் நம்புவது எப்படி என்பது. மற்றவரோ, முற்றிலும் புராணங்கள் அப்பிரமாணங்களெனச் சொல்வது எவ்விதத்திலும் பொருந்தாது. புராணங்கள் ஐந்தாம்வேதங்களுக்கு ஒப்பானவையென்று சாந்தோக்கியோபநிடதமுதலிய உபநிடதங்களிற் கூறியதுபற்றி அவற்றை அப்பிரமாணமெனக்கொண்டால் நாம் வேறொருவழியிலும் வேதங்களைப் பொருள்படுத்தத்தகுந்த கருவிகளைக் கண்டெடுப்பது அரிதாய்விடும். அதுகொண்டே வேதவியாசமுனிவர்கோமான் தாமருளிய மாபாரத முதலியவற்றிலும் புராணங்களைக்கொண்டே வேதார்த்தங்களை புணரவேண்டுமென்றார். அற்றேல், முன்பு கூறிய குற்றங்களுக்கு எப்படி வழிவிடுவீர்களெனின் கூறுவாம்.

எவ்விடங்களிலும் அந்தணர்களை யாராதிக்கவே எழுதியிருப்பது உண்மையாயினும், அது அவர்களிடம் அநேக மந்திர சம்ஸ்காரங்களும், பல வித்தைகளும், வத்துநிலைகாட்டுங் கருவிகளும் இருந்தமையால், அவற்றையறிந்துகாப்பாற்றிய பெரியோர்களை நாம் எப்பொழுதும் பூஜிக்கவேண்டியது நமது கடமையென்று வித்தையிலுள்ள பெருமைப்பொருத்து. அவ்விதமகிமை அவரிடம் புராணங்கள் கூறியதுகொண்டு அப்புராணங்கள் எவரோ எழுதிவிட்டாரென்று சொல்லக்கூடாது. ஆனா

[illegible]

ல், தத்துவங்களை நன்கு ஆராய்ந்து அவற்றில் யாவரும் சரச மாய்த் தங்கள் மனதைச்செலுத்தவும், தீமைகளினின்று விலக்கவும் தாமே நல்ல பரிபாகமடைந்த சித்தத்தைக் கொண்டிருப்பரேல், அவர்களுக்கு உள்ளதுள்ளபடி சொல்லக்கூடும். அப்படிக்கில்லாவிடத்து அவரவர்கொண்டவழியெல்லாம் முற்றிலும் கெடுதலென்றும், தாம் சொல்லப்போகிற வஸ்துவொன்றே நிச்சயமென்றும் சிலபுகழ்மொழிகளாற்சொல்லி, எவ்விதத்திலும் அவரவர்க்கு விதிவிலக்குகளைமாத்திரம் வெளியிடுவதே அப்புராணங்களின் கருத்தன்றி வேறில்லை. புராணங்களில் பூகோளம், வானசாஸ்திரம் முதலிய விஷயங்களைக்குறித்துத் தத்துவ ஆராய்ச்சிக்கு முற்றிலும்விரோதமாயெழுதப்பட்டது மில்லை. அதுவிஷயத்தைப்பற்றிப் பின்பு விரிப்பாம்.

இப்புராணங்களிலே தேவதைகளில் ஒன்றிற்கு மற்றொன்று பெரிதெனவும், மற்றோரிடத்து மற்றொன்றிற்கு மற்றொன்று பெரிதெனவுங் கூறியதை உண்மைநோக்கி ஊக்கத்துடன் பார்க்கின் நல்ல தாற்பரியத்தையே கொடுக்கும். அஃதெங்ஙனமெனில், இப்புராணங்களில் சாத்துவீகம், ராசதம், தாமதம் என மூவகுப்புக்களுண்டென்றும், அவற்றுள் சாத்துவிக புராணம் முற்றிலும் பிரமாணமென்றும், மற்றவை சாத்துவிகபுராணத்துடன் முரணுதவிடம் பிரமாணமாமெனவும், இவ்விதங் கொள்ளல் இன்றியமையாது எனவும், அதற்குப் பல பிரமாணங்களும் உள எனவும் கூறுவர். அவர் சொல்லும் பிரமாணங்களையும், அவற்றை மறுக்கும் வழியையும் வரக்காண்க.

இன்னும் வரும்.

மதமும், அதின் பிரயோசனமும், அதின் ஆசிரியரும்.

[தொடர்ச்சி]

தற்காலத்தில் அவ்வாசிரியமணியாய சங்கராசாரியஸ்வாமிகளின் சரித்திரத்தை விளக்கும் புஸ்தகங்கள் பலவுள. அவை வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வித்துவான்களால் எழுதப்பட்டன. அவற்றுள் சில ஒற்றுமைப்பட்டும் சில அவ்விதமில்லாமலு மிருப்பதாய்ப் பலர் கொள்கையுண்டு. அவற்றைவிலக்க அதுவிஷயத்தில் நாம் அறிந்தமட்டில் தக்க காரணங்களால் அச்சரித்திரங்களின் உண்மையான ஸ்வரூபத்தைச் சற்றே இங்கு விளக்குவாம்.

ஆதியில் இவ்வாசிரியமணி யவதரித்தகாலத்தில் அவரது திருவவதாரஸ்தலமாய மலையாளநாட்டிலே அவ்விடத்துப் பிராமணரொருவரால், "கேரளசங்கரவிஜயம்,, என்கிற சங்கரவிஜயம் ஒன்று எழுதப்பட்டுள்ளது. அங்ஙனமே அவரது சிஷ்ர்களுள் ஒருவர் எழுதியது [[illegible] ஶங்கரவிஜயஃ] பெருஞ்சங்கரவிஜயம் என்பது. அதை அனுசரித்துச் சிறிதுகாலஞ் சென்றவதரித்த வித்தியாரணியமுனிவரென்று வழங்கப்படும் மாதவாசாரியசுவாமிகள் எழுதியது மாதவீயம் எனவும், வியாசாசலீயம் எனவும் வழங்கிவருகின்றது. மற்றும் அவ்வாசிரியன் திருமரபிலுதித்த மற்றொரு துறவிமணி தமது மாணாக்கர்மனங்களிக்க ஸ்ரீமத்சங்கராசாரியசுவாமிகளது திவ்யதிருவிளையாடல்களைச் சேர்த்தெடுத்து [ஶங்கரவிஜயவிலாஸஃ] சங்கரவிஜயவிலாசம் எனப் பெயர்கொடுத்து, ஓர் புஸ்தகம் எழுதியிருக்கின்றனர். அதன்பின்பு தென்னாட்டிலுதித்துப் பல காவியங்களியற்றிய பண்டிதசிரேஷ்டரான ஸ்ரீமான் ஸ்ரீராஜசூடாமணிதீக்ஷிதரென்பவர் [ஶங்கராப்யுதயஃ] சங்கராப்யுதயம் என்கிற ஓர் சிறு காவியம் எழுதியிருக்கின்றார். பின்பு அனந்தானந்தகிரி என்கிற ஒருவரும் தாம் கண்டதும் கேட்டதுமாய்ச்சிலவற்றைச்சேர்த்து ஓர் சரித்திரமெழுதியிருக்கிறார். பிறகு அதி சமீபகாலத்திலெழுதிய மணிமஞ்சரிபேதினி என்கிற ஓர் கிரந்தத்திலும் அவர் சரித்திரம் காணப்படுகின்றது. மேலும், இப்பொழுது இவற்றையெல்லாமாராய்ந்து சென்னையில் சர்வகலாசாலையில் தெலுங்குபாஷைப்பண்டிதர் எழுதிய கிரந்தமும் ஒன்றுண்டு. இவைகளை ஆராயுங்கால், இவற்றுள் அனந்தானந்தகிரீயம் என்கிற சங்கரவிஜயம் ஒன்றுநீங்க மற்றெல்லாம் ஒருவாய்கொண்டிருப்பதால், சரித்திரவிஷயங்களில் நாம் அவைகளை யனுசரித்து இங்கெழுதியது. அவ்வனந்தானந்தகிரீயமென்பது இவ்வாசாரியரியற்றிய அத்துவிதசித்தாந்த நிலைமைமுற்றிலும் அறியாதவரும், வேறு மதஸ்தரும் எவ்விதமும் இவரைத் தூஷிக்கவெண்டுமென்கிற துராபிப்பிராயங்கொண்டவருமாய் அப்புஸ்தகத்தைப் பார்க்குமளவிற் புலப்படுமாதலால், அது இவ்வாசிரியன் சரித்திரத்தை இத்திறமெனச் சொல்லும்வழியை மறுக்கத்தக்க வல்லமையற்றதென்பது திண்ணம். இதுவிஷயம் வேண்டிய விவரங்கள் பத்திரிகைவாயிலாகக்கேட்பின் விடையளிக்க யாதொருதடையுமில்லை. அவர்கள்தாம்ஆராதித்துவந்தது "சந்திரமௌலீசுவரர்,, என்கிற ஓரிலிங்கமும், "இரத்தினகர்ப்பகணபதி,, என்கிற ஓர்கணபதிபிம்பமுமாம். அவ்விரண்டுபிம்பங்கள் அவரது சிஷர்களின் குலமாய ஸ்ரீசிங்கேரி சமஸ்தானத்தில் வைத்துப் பூசிக்கப்பட்டுவருவதாய்த் தகுந்த காரணங்களால் நம்புகிறோம். அவர் சிஷர்களில் நான்குபெயர் அத்துவித மதாசாரிய பரம்பரையிற் சேர்ந்தவர். அவர்களின் பெயர் சுரேசுரர், பதுமபாதர், ஹஸ்தாமலகர், தோடகாசாரியர் என்பார்கள். முறையே இவர்களின் சரித்திரங்களைப்பற்றிச் சிறிதுவிரிப்பாம்.

இன்னும் வரும்.

[illegible]

ஆத்மாவும், சரீரமும்.

[தொடர்ச்சி]

க0. "அணுவாய ஆத்மா இப்பெரிய சரீரத்தை எவ்விதம் நடத்தும்?' இக்கேள்வியின் கருத்து. ஆத்மாவோ அணுவாயுள்ளது; சரீரமோ பருத்தது; இவ்விரண்டிற்குமோ சிறிதேனும் சம்பந்தங்கிடையாது. ஆதலால் நாம் உலகத்திற்கண்டபடி அணுவான [அதாவது நுட்பமான] பொருள் பருத்த [அதாவது தன்னிலும் அதிக அளவினையுடையதாய] இவ்வுடலைநடத்தும் சக்தியை எவ்விதம் அடையுமென்பது. இதுகேள்வியிற்சேருவதேகூடாது. ஏனெனில், கண்கூடாகப்பார்ப்பதில் தன்னிலும் எத்தனையோ மடங்குள்ள கப்பல் முதலிய கருவிகளை நடத்தும் மாலுமியை நாம் அறிவோமல்லவா? அவ்விடம் அம்மரக்கலத்தினளவினும் அம்மாலுமி அளவு சிறிதாதலால் அவன் அதை நடத்த வலிமையுடையானல்லவென்று வினவெழும்புமோ? உலகத்தில் மூட்டைதூக்கு மவர்களுக்குக்கூடத் தன்னிலும் பருத்த அளவினையுடைய வஸ்துவை நடத்தத் தனக்கு வலிமையுள்ளது தெரிந்தவிஷயமே.

கக. "ஆத்மா சரீரத்தின் வேறுமாயின் குழந்தைகளறிவிற்கும் முதியோரறிவிற்கும் வேறுபாட்டுக்குக் காரணம் யாது?,, இதின் கொள்கை வருமாறு காண்க. அவ்வான்மா சரீரத்தின் வேறும், மனம் அணுவாயும், அதற்கு எக்காலமும் குறைவு

[illegible]

(௪௨) [illegible]?

[illegible]

முதலிய விகாரமற்றதாயு மிருக்குமேல் பிராணவாயுவும் அதின்வசமாயுளதாதலால் சரீரம் இளமைப்பருவமாயிருந்தாலென்ன? முதிர்ந்திருந்தாலென்ன? எவ்விதமேனு மொருவிதமாயல்லவோ ஜீவனது அறிவு வெளிப்படவேண்டும்? அங்ஙனமோ அனுபவமில்லை. குழந்தைகளுக்கும், நடுப்பருவமுள்ளவர்க்கும், முதியோருக்கும் அறிவு ஒருவிதமாயிருப்பதில்லையே. அதுகொண்டே நாம் சரீரத்தின் உறுப்புக்களிலொன்றுன மூளையின் குணமே முற்றிலும் புத்தியென்று சொல்வது. ஆத்மா சரீரமேயாதலால் அதின் இளமை முதுமைகளை யனுசரித்தறிவது உசிதமாகுமென்டதே. ஐயா! உடலின் இளமை முதுமைகளை அறிவு அனுசரிப்பதென்று நன்குரைத்தீர்; இதுகொண்டே அறியுந்தன்மை சரீரத்தினது ஓர் பாகத்தின் குணமாய்முடியாது நாம் முன்னரே ஆன்மாவின் சொரூபமான அறிவு தனைத்தவிர்த்து மற்றொன்றையும் தனித்துக் கவராதென்றும், மனமுதலிய கருவிகளைத் துணையாய்க்கொண்டே ஒரு பொருளைக் கவருமென்றும் எடுத்துரைத்தோமல்லவா? அங்ஙனமாதல்பற்றி மனம் நடுவிற் சிலகாலம் ஓய்ந்திருந்தமையால் அது திரும்பவும் தன் சுபாவமடையச் சிறிதுகாலம் வேண்டியது அவசியமே. அங்ஙனமே முதுமையிலுந் தினந்தோறும் நித்திரைகாலத்தி லுண்டாவதுபோல ஓய்வுண்டாவதறிக. வெளிப்புலன்களும் தக்கபரிபாகமடையாதவையாதலால் அநேகவிஷயங்களுடன்கூடியும் அவ்விஷயங்களைக்கவருஞ் சக்தியற்றனவாயிருக்கின்றன. "பரிபக்குவமாகாக்கலயம் தண்ணீரைத் தரிக்காது,, என்பதுபோல் என்று துணிவாய் நம்புக. அதே கலயம் பரிபாகமடைந்தாலல்லவா தண்ணீரைத் தன்னுள்வைக்கத்தகக சக்தியையடையும்; அவ்வாறு நமது சரீரத்திற்கும் அநேககாலம் சூரியகிரணமுதலியவற்றின் சம்பந்தத்தாற் பாகமுண்டாகுமல்லவா? அப்படியே அனுபவமு முண்டு. அஃதெங்ஙனமெனில், குழந்தைகளது மண்டையோட்டிற் கைவைத்தால் மெதுவாயிருப்பது காலஞ்சென்றுற் கல்லினும் மேலாகும்வழி நாம் கண்டுள்ளதல்லவா? அன்றியும் முதுகெலும்பு இளமையில் அநேக துண்டுகளாய்நின்று காலஞ்சென்றுல் அநேகமாயொன்றுபடுவதும் வழக்கமாய்க்கண்டுள்ளதன்றே? அதுகொண்டு இளமையில் அநேக துணைக்கருவிகள் பாகமாகாததினுல் வேண்டிய வேலைகளில் அவைகளையேவுதற்குச் சக்தியற்ற அவ்வாத்மா சரீரத்தின் இளமை முதுமைகளையும் எதிர்பார்க்கவேண்டியது அவசியமன்றே? மனமும் முதுமையில் ஓய்வடையுமாதலால் நினைவு குன்றிவருதல் உசிதமே. சரீரம், ஜீவன், மனம், பிராணன் ஆகிய இவற்றில் வேற்றுமையிருப்பினும் சரீரத்தையனுசரித்து ஜீவன், அறிவு முதலியன விளங்குவது உசிதமேயாகும்.

௪௨. "சரீரத்தின் வேருய் ஜீவனுள்ளதாய் அனுபவமும், விவகாரமுமுண்டா?,, இக்கேள்விக்கு விடை. நான் குள்ளம் நான் உயரம் என்று தொடங்கிய பலவிவகாரங்களால் சரீரமும், ஜீவனும் ஒன்றுய்ப்புலப்படுவதால், எவ்விதம் அவ்வான்மா சரீரத்தின்வேருய் எப்பிரமாணத்தாலாவது கொள்ளற்பாலது என்பதேயாம். விவகாரம் அனுபவத்தையொட்டியேயுள்ளது. இவ்விடத்திலோ விவகாரம் இருவகைப்பட்டது. நான் கறுப்பு, நான் சிவப்பு என்பதுபோல் எனது சரீரம் என்பதுமுண்டு. இதுவும் நீர் எடுத்துக்காட்டிய சரீரவுறுப்புக்களிலொன்றுன மூளையைப்பற்றியதென்பதும் எனதுமூளை என்று வழங்குவ

[illegible]

(௪௩) [illegible]?

(௪௪) [illegible]?

[illegible]

[illegible]

தால் அங்ஙனம் சொல்லப்பொருந்தாது. ஆயினும் எனதாத்மா என்கிற விவகாரத்தால் ஆத்மாவிலும் வேருய ஓர் வஸ்துவே நான் என்னும் பதப்பொருளாய் முடியும் என்பது கூடாது- இவ்விரு பொருட்களை மாற்றிச் சரீரத்தைப் பொருளாய்க்கொண்டு நான் கறுப்பு என்று தொடங்கிய விவகாரங்களும், எனது ஆத்மா என்கிற விவகாரங்களும், ஆத்மாவை அவ்விதங்கொண்டு எனது சரீரம், நான் அறிவேன் என்று தொடங்கிய விவகாரங்களும் ஒவ்வுமாதலால், அவ்விரண்டினும் வேருய் ஒருபொருள் சித்தித்தல் ஒருபொழுதும் கூடாதுபற்றி, யாம் கூறிய அனுபவத்திற்குச் சிறிதேனும் தடையில்லை.

௪௩. "அது சரீரத்தின் வேருயிருக்கவேண்டியது அவசியமா?,, ௪௪. "அது அழிவற்றதா?,, இவ்விரு வினுக்களில் முதல் வினுவுக்கு விடை. நாம் முன்னுரைத்தபடி அறிவானது சரீரத்தின் ஓர் பாகமான மூளை முதலியவற்றின் குணமாகச் சித்தித்தல் கூடாது பற்றி அவ்வறிவினிடமாய் ஜீவன்வேருய்த் துணியப்பட்டான். அவன் நித்தியனென்றே கொள்ளல் வேண்டும்; அங்ஙனமின்றி அநித்தியனுயின் அவன் உண்டாதல், நசித்தல் இரண்டிற்கும் காரணம் வேண்டும்; உண்டாவதோ முற்றிலும் பொருந்தாது. நாம் முன் செய்த உபந்நியாஸங்களால் அறிவானது ஒரு பௌதிகத்திலும் சேராது பற்றியும், அவ்வறிவு மற்றொன்றின் பிரிவாகச் சொல்லுதல் கூடாது பற்றியும் நாம் அவ்வஸ்துவை அழிவற்றதெனச் சொல்லத்துணிந்தோம். இங்கு காட்டிய பல காரணங்களால் ஆத்மா சரீரத்தின் வேறென்றும், அச்சரீரத்தினிடமே யிருந்து அதை நடத்த வலிமை பெற்றதென்றும் துணியப்பட்டது.

பெண் கல்வி

[32வது பக்கத் தொடர்ச்சி]

வித்தையும் இவர் சுபாவமும் சேரும் என்பதை நோக்குழி, நெருப்பும், காற்றும் சேருவதுபோல் என்பதற்குச் சந்தேகமுண்டோ? அவர்களுக்குப் பாலியத்திற் கற்பிக்கவேண்டி வீட்டு வேலைகளைத்தவிர்த்து, மற்றப்படி பள்ளிகளுக்குப் போவது என்கிற ஓர் காரணமாத்திரத்தால்தான் கண்டபடி திரிவது உசிதம் அல்லவே. எவ்வளவு படிப்பினும் வீட்டிற் செய்யவேண்டிய வேலைகள் எவ்விதம் மனதிற்படும். மனையாட்டி என்பவள் மனை ஆளும் தன்மை பெற்றவள் அல்லவா? இப்பெண்கள் கன்னிப் பருவத்தில் கலைகளனைத்தையும் கற்றுக் கணவனகம் சென்று, அவன் வீட்டிற் செய்யவேண்டிய சங்கதியாதுமறியாது தனது நாயகனுக்கு மாத்திரம் இன்பந்தரவல்லவளாயினும், தேகசங்கதிக்குத்தக்க சுகம் கொடுக்க அவள் அறியாததினுல் ஆடவர்க்கு ஆருத்துயரம் தருவாளல்லவா? அதுகொண்டே பெரியோர் பெண்கள் படித்தலொழிக்க ஏவினுர் என்பது சிலர் கொள்கை. இது விஷயம் நாம் கொடுக்கும் விடையிது. ஐயா நீர் உரைத்தபடி அவர்கள் சுபாவம் என்றும் சபலமுள்ளதென்பது உள்ளதேயாயினும், அதற்கு நீர் செய்யும் ஓர் வகைக்கட்டுப்பாடு [அதாவது எவ்விதம் வெளிவிடாது சிறையில்வைத்ததுபோல் வீட்டுள் வைத்துக்காத்தல்] ஒன்றே அவர்கள் சுபாவத்தை மாற்ற யாங்ஙனம் வல்லமை பெறும்? அதுகொண்டே ஸ்ரீ மனுமுனிவர் [ஆடவரா லகத்திற்கட்டுண்ட பெண்களல்ல ரக்ஷிக்கப்பட்டவர்கள்; தன் விவேகந்

[illegible]

கொண்டு தன்னைத்தான் ஆளும் மங்கையே ரக்ஷிக்கப்பட்டவள்] என்று கூறியது காண்க. ஆதலால், தாங்கள் எடுத்துரைத்த குற்றங்களில் முதற்கூறிய சுபாவகுற்றம் மறுக்கப்பட்டது. பின்னும் படிப்பு சுதந்திரத்தை விருத்தி செய்யும் அவர்களுக்கு அது முற்றிலும் உரித்தல்லவென்றும், அது வேண்டுவதில்லையென்றும், அங்ஙனம் கொள்ளின் குற்றங்கள் பல உண்டாகும் என்றும் எடுத்துக்காட்டினீர்கள். அது விஷயம் ஆடவரிடமும் யோசிக்கக்கூடும். ஏனெனில், கல்வி எவ்விடமும் கொழுப்பையும் சுதந்திரத்தையும் தராது. அவ்விஷயத்திற்கும் அதிகாரிகளுண்டு. யாங்ஙனமெனில், ஆடவர்களிடத்திலும், நல்லோரிடத்து வித்தையால் லோகோபகாரங் கிடைக்கும், தீயோரிடமுள்ள கல்வி தீதாகவே முடியும் என்பது கண் கூடாகக் கண்டதே. ஆதல் கொண்டே ஆன்றோர் "தீயோரிடத்துள்ள வித்தையால் விவாதமும், தனத்தால் மதமும், நுண்ணறிவால் பலரைக் கெடுத்தலும் ஆகிய இவைகளே விளையும். பெரியோரிடத்து வித்தை தேசாபிமான முதலிய அபிமானத்தையும், திரவியம் உசிதமாய் தேசம், காலம், பாத்திரம் அறிந்து தானத்தையும், நுண்ணறிவு பிறரைக்காத்தலும் ஆகிய இவைகளையே விளைவிக்கும்" என உரைத்திருக்கின்றனர். ஆகையால், வித்தை சுதந்திரத்தைப் பெருக்கும் எனக்கொண்டு பயனுள்ளதாய பெண்கள் கல்வியை விலக்க முடியாது. நீர் கூறியுள்ள காரணத்தின் படி படிப்பானது ஆடவர்களுக்குமே கூடாதென்றுரைக்க ஏன் இடங்கொடாது? ஆதல்கொண்டே குக்கிராமங்களில் வசிக்கும் எழுத்து வாசனையற்றுக் கையெழுத்துக்குக் கடன்வாங்கும் கனவான்கள் இப்பொழுதும் சில சமயங்களில் "படித்தவன் தான் படுகுழியில் விழுவான்" என்று ஓர் பழமொழி வழங்குவது வழக்கம். அவர் போன்ற போலிஜனங்கள் போர் போராய் மறுப்பினும் நமது தாற்பரியம் தடைப்படாது. நாமும் எவ்விதத்திலும் பெண்களுக்கு இளமையில் நமது கடமைகளைக் கற்பிக்கவேண்டுமெனச் சொல்ல வந்தோமன்றிச் சித்தந் தோன்றியவாறு வெளியில் விடும்படி சொல்ல வந்தோமில்லை. அப்படிச் செய்வது நமக்கும் அநேக குற்றங்களுக்கு இடமாகுமென்பதிற் சிறிதேனும் தடையில்லை. இவர்கள் படிப்பு ஓர் அளவையிலகப்பட்டதொழியப் புருடர்கள் படிப்பதுபோல் ஒவ்வொரு சங்கதியிலும் நன்கு பயின்றிருக்கவேண்டிய தவசியமெனத் தோற்றவில்லை. பெரியோர் தருமநூற்களிற் பெண்கள் கல்வியைப் பற்றி விதிவிலக்குகள் நன்றாக விளக்காதுபோனபோதிலும், நல்லொழுக்கமுடைய ஓர் மங்கைமணி செய்யவேண்டிய தருமங்கள் அவாவும் இன்றியமையாத சில பாகங்களைமட்டில் கைத்தொழிற் காரரைப்போலக் கற்கவேண்டியதே அவசியம். அவர்களுக்குரிய கடமைகளை ஸ்ரீமான் மனு "திரவியத்தின் வரவு செலவுகளில் பெண்களையே ஏற்படுத்துக" என்றும், வியாசர் "நல்லுருவம் நற்பருவம் அடையினும் சங்கீதம், நிருத்தியம் முதல் அறிந்திருப்பினும், தனக்குத் தக்கவனென்று தன் கணவனையே வழிபடுவாளன்றி வேறொருவனைச் சித்தத்திலும் வையாள்" என்று தொடங்கி "தருமகாரியத்தில் அனுகூலமும், பொருள்விஷயத்தில் பிடித்தமும்" என்று சிற்சில ஸ்திரீகளினுடைய குணங்களை எடுத்து "வீட்டிற்கு வேண்டிய சாமான்களைச் சேர்ப்பதிலும் மற்ற விஷயத்திலும் தக்க வலிமை பெற்றிருப்பது பெண்களுக்கிலக்கணம்" என்றும், அங்ஙனமே

[illegible]

பத்ரிகா:

[illegible]

"நற்குணங்களுடன் தானியமுதலியவற்றைக் காப்பாற்றியும், வீடுகளை அலங்கரித்தும் பெரியோர் குழந்தைகள் சிநேகிதர்கள், பந்துக்கள், வேலைக்காரர்கள் இவர்களுக்கு முறையே ஆசனம், போசனம், கொடை, சம்மானம், நல்வார்த்தைகளைச் சொல்லல் முதலியவற்றில் வல்லமை அடைந்திருத்தல் வேண்டும்" என்றும், "வீட்டின்காரியங்கள் நிறைவேறக்கணவன் கொடுக்கும் திரவியத்தில் காரியத்தையும் முடித்துத்தன் ஸாமர்த்தியத்தால் சிலவற்றை மிச்சம் வைக்க வலிமையுடையவளே மங்கைகளில் சிறந்தவள்" என்றும், இன்னும் பற்பலவிலக்கணங்கள் கூறியிருக்கின்றனர். அவ்விதமே தக்கன் என்பவரும் "தனது பெண்டீர் அனுகூலமாயிருப்பின் அதுவே சுர்கம்" என்று பிறகும் (தமது கடமைகளையறிந்து, கணவர் சொற்கிசைந்து, அவர்மனம்போல் நடப்பவளே மனைவி) என்று நன்கு அவரிலக்கணங்களை விளக்கினர். மனு முனிவரும் அவர்களைப்புகழ்ந்து (மனைகட்கணி மனைவிகளே) என்றார். இவ்வாறு எழும்பும் அநேக வசனங்களாலும், அவர்களின் தருமத்தில் (குழந்தைகளைப் பெற்றெடுத்து அவைகளைப்பரிபாலனம் செயல்) என்றெழுதியிருப்பதாலும், இவர்களுக்கு வீட்டின் சாமான்களைச்சேர்த்தலும், குழந்தைகளை இரக்ஷித்தலும், வரவு செலவு நடத்தலும், தேவர், பெரியோர், அக்கினி இவர்களைப் பூசித்தலும், கணவன் மேனியுபசரித்தலும், தானியமுதலியவற்றைக்காத்தலும், தன்கற்பைத்தானே காப்பாற்றிக் கொள்வதும், இன்னும் அநேகம் தர்மங்களாகப் புலப்படுவனவாதலால் அவைகளுக்குப்பகுத்தறிவு இன்றியமையாதுகொண்டும், அவ்வறிவு பெரியோருபதேசித்தாலன்றி சித்தியாதுபற்றியும் அவர்களுக்கு வேண்டிய வித்தை வேதம் முதலிய நூற்களல்ல. முன்னரே வீட்டில் உள்ள தாய், மாமி முதலிய பெரியோர்களிடம் பெரியோர் வழிமாறாது வரும் தருமங்களைக்கற்றுக்கொள்வதே அவர்களுக்கு வித்தை. அவற்றிற்கின்றியமையாத எழுத்து முதலியவற்றை யமன் கூறியசந்நியாசினீதர்மத்தால் "தகப்பன், அல்லது அவனுடன் பிறந்தவன், உடன்பிறந்தவன் அல்லது மற்ற எவரும் படிப்பிக்கக்கூடாது' என்கிற வசனத்தால் வீட்டிலே செய்யவேண்டியதே உசிதம் என்பது சாத்திரங்களின் கருத்து. இவ்விதம்செய்யாது அவர்களுக்கு முற்றிலும் சுதந்திரம் கொடுப்பதில் சிறிதேனும் குற்றம்இல்லையெனச்சொல்ல நமது நாத்துணியாது. இக்காலத்திலோ காலகொடுமையால் "ஆங்கிலேயர்செய்வதே ஆன்றோர்ஆசாரம்" ஆயிற்றாதலால் நாம் உரைப்பது மற்றவர் கேட்கினும்கேட்காமற்போயினும் "எவ்விமுதம் ஜனங்களுக்கறிந்த மட்டிலும் ஹிதம் சொல்லுக" என்கிற விதியைக்கொண்டு நாம் அறிந்தமட்டில் சுருக்கி இங்ஙனம் வரைந்தோம்.

கடிதங்கள்.

கடிதக்காரர் அபிப்பிராயத்திற்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

கடிதம் எழுதுவோர்க்கு அறிக்கை.

ஸம்ஸ்கிருதத்தில் அல்லது தமிழில், ஒருவர் தூஷணமின்றி தருமம், வருணாச்சிரமம், உலகசங்கதிகள் முதலியவற்றைக் குறிக்கத்தக்கனவும், எளிபநடை யுள்ளனவுமாய் எழுதவேண்

[illegible]

டியது. ஒரேபாஷையில் எழுதியிருந்தாலும் மற்றொன்று அதற்கிணை சேர்க்கப்படும்.

ஐயா!

நமது தேசத்திலுள்ள மதங்கள், வருணாச்சிரமங்கள், அவற்றின் தருமங்கள் இவைகளை எவ்விதத்திலும் முன்னுக்குக்கொண்டுவர வல்லவா இப்பத்திரிகை எழும்பியது? இது இப்பத்திரிகையைப்படிக்கும் எல்லோர்க்குந்தெரியுமே. இப்பொழுதோ நமது மதங்கள் எல்லாவற்றிற்கும் ஓர் பெரிய கேடு சம்பவித்து வளர்ந்துவருகின்றது. அதாவது "நாத்திகம் ஓங்குதலும் கிறிஸ்துவம் தழைப்பதுமே,, அவ்விரண்டு உபத்திரவத்தின் நடுவில் நாம் உள்மதங்களைக்கொண்டு சண்டை செய்து காலத்தை வீணில் கழிப்போமானால் எவ்விதமும் நமது மதம் சீக்கிரம் ஒழிந்துபோவதற்குச்சிறிதேனும் ஐயமில்லை. அவர்கள் நமக்குள் வேறுபாட்டையே வேண்டுகிறார்கள். நமக்குள் நாம் வேறுபட்டு ஒருவர்க்கொருவர் தூஷிப்போமானால் இதைக்கேட்டு இருவரையுந்தூஷித்து தன்வழி பாமரரைச்சேர்க்கஅவர்கள் முயல்வது நாம் கண்டிருக்கின்றதே. முற்றிலும் தத்துவத்தை ஒளித்தால் நமது சாஸ்திரங்களில் தத்துவமேயில்லையென்கிறார்கள். இவ்வகை அரையறிவுகொண்டு அறிஞர்களாய்ப் பாவிக்கும் சிலர்களுக்கு முழுதும் காட்டாமலும், முழுதும் மறைக்காமலும் கற்பிக்கவேண்டியது அவசியம். அதுகொண்டே சன்மதங்களின் உண்மைகளைத்திரட்டி இங்கு எழுதிவருகிறோம். அவற்றுள், நாம கண்டிக்கவேண்டியதாய்க்கொண்டதும், குற்றங்கள் நிறைந்ததுமானது நாத்திகம் முதலிய சில மதங்களே. அவர்களையும் முற்றிலும் மறுக்க இங்கு எழுந்தோமல்லம். அவர்களுக்கும் நமது மதத்தின் நல்ல அபிப்பிராயங்களை வெளியிடவே என்றறிக. அங்ஙனமே செய்யவேண்டியது இந்துக்களின் கடமை. அதுகொண்டே மதங்களைப்பற்றி நாம் பிறரைத் தூஷியாது எழுதி வருகிறோம். இங்ஙனமிருக்க. சிலகாலத்திற்குமுன் "வேலூர்ஜனாநுகூலநி,, என்னும் பத்திரிகையில் ஓர் வைணவருக்குப் பதில் உரைக்கப்புகுந்து தாறுமாறாய் மற்றையமதஸ்தரைத்தூஷித்தெழுதும் "நன்மைவிரும்பி,, என்கிற ஒருவரைப்பார்த்தேன். அவரால் தூஷிக்கப்பட்ட பிரதிவாதி நம்மிடம் அக்குற்றங்களை மாற்றிக் கொள்ளவேண்டி "துதர்க்காசலதுலிசம்,, என்கிற ஓர் கடிதம் எழுத அதை நாம் முன் பத்திரிகையில் வெளியிட்டோம். அது கண்டு ஏதோ ஒருவர் கையெழுத்தில்லாத ஒரு கடிதம் எழுதி, அதில் அத்துவித மதத்தை மனம்போனபடி தூஷித்தார். ஆனால் அதுவே அவருக்குள்ள கேவலமதாபிமானத்தையும் பிறர் சுபாவமறியாத்தன்மையையும் தம்மதங்களை மற்றொருவர் புகழின் அது நமது மதத்திற்குத் தூஷணமென்றெண்ணி அவர் எழுதிய பிரமாணங்களுக்கும் பதில் எழுதச் சக்தியற்றவரென்பதையும் வெளியிடும். இல்லாவிடில் ஏன் அதற்குப்பதில் நமது பத்திரிகைக்கனுப்பார். அநுசிற்க. இனியாவது உள்மதங்களில் துவேஷத்தை விட்டு அத்துவிதம் முதலிய எல்லாமதஸ்தரும் அவ்வவ்மதங்களுக்குரியபடி அதில் உள்ள உண்மைகளையும் மேன்மைகளையும் பிரயோஜனங்களையும்பற்றி எழுதவேண்டியது எழுதில் அவரவர் தாற்பரியம் மாறாது வெளியிடுவோம். ஆனால் சாஸ்திரிகள் மாத்திரம் அறிந்துகொள்ளத்தக்க பதமிருக்கக்கூடாது. ஆகையால் இவ்விஷபத்து சங்கியை யொழித்து வைதிகமானமதங்

[illegible]

களைமட்டில் மற்றவருக்குகோபமுண்டாகாவழிஎழுதுக. தன்மதத்தைப் புகழ்வதே பிறருக்குக் கோபம் என்றறிந்தொழியவேண்டாம். உலகம் பலவிதமல்லவா? ஒருவர் எல்லாவற்றையும் சந்தோஷிக்கச் செய்வது மிகக்கடினம். "எவ்விதமும் தனக்கு ஹிதமே செய்து கொள்ளவேண்டும்; ஜனங்கள் பலவாறுரைப்பர் உலகமே யெல்லாம் சந்தோஷிக்கும் உபாயம் ஒன்றுமில்லை,, என்கிற ஆன்றோர் வசனத்தை ஆராய்ந்து நமக்கும் பிறர் அநேகருக்கும் சுகத்தையே நாம் விரும்பவேண்டும். பாருங்கள்! மதவழிபாராது ராஜாங்கவிஷயத்தை நன்கு விளக்கி இந்துக்களிலும் தமிழர்களுக்கின்றியமையாததாய "சுதேசமித்திர ரத்தினத்திலும்,, அநேக பாமரர் ஆக்கிரகப்படுகிறார்கள். இனி வித்துவான்களுக்கு நாம் ஏதெடுத்துரைப்பது. ஆதலால் உள்மத துவேஷத்தை விடுங்கள்; மத தத்துவங்களை விளக்குங்கள்; நமது பத்திரிகைக்கெழுதுங்கள்; பிரமாணங்களுக்கொத்தமார்க்கத்தை அநுசரியுங்கள்.

பத்திராதிபர்

சத்தி.

சத்தியென்பது உலகின்கணுளதாய பொருளனைத்தினையுமாராயுங்கால் அவற்றின்றோற்றஞ் சத்தியின்கணன்றி வேறன்றென்க. சத்தியெனினும் ஆற்றலெனினும் வன்மையெனினுமொக்கும். அற்றாகலின் சத்தியென்பதினைத்தென்று விவகரிப்பாம்:—

கட மண்ணினின்று மெழுகின்றதேனு நேர் மண்ணினின்று மெழுந்ததன்று. மண்ணினின்று மெழுந்ததுண்டேற் கடல், யாறு முதலன மண்ணினின்று முளதாகவேண்டும்; அங்ஙனமின்று. கடசத்தி யெய்திய மண்ணினின்றுந் தோன்றியதென்பது திண்ணம். அற்றாகலின் கடத்துக்குச் சத்தியே யுபாதானகாரணமென்க. ஆடைக்கு நூலும் பஞ்சுங் காரணமாக நிகழினும் நூல் யாங்ஙன நேர் காரணமாமோ அங்ஙனமே மண்ணுஞ் சத்தியுங் காரணமாக நிகழினுஞ் சத்தி நேர் காரணமாமென்பது தேற்றென்றுணர்க. அவ்வப் பொருட்கண்ணு நியதமாய சத்திகள் பலவுள. எவ்வெப்பொருளினு நியதசத்திகள் யாவையுளவாமோ அன்னவை யவ்வப்பொருளினின்று மெழுவது திண்ணம். அவையே காரியமெனப்படுமென்க.

இனி மண்ணினின்றுங் கடமுதலியன வெழுகின்றனவேயன்றிப் படமுதலியனவெழக் கண்டாமின்று. இங்ஙனமே யவ்வப்பொருளினின்றும் அன்னவற்றிற்கினமாய பொருள்களே தோன்றுகின்றன. அவ்வப்பொருள்கடோன்றற் குபாதான காரணமாய சத்தி, கண்கூடா நிகழ்வதன்று. யாங்ஙனமெனின் சத்தன், சத்தி, காரிய மென்னுமிம்மூன்றனுள்ளுஞ் சத்தனுங் காரியமுங் கண்கூடாம் பகுதிய. சத்தியெனினற்றன்று. காரியம் புறத்தே தோன்றுவழி சத்தியுளதெனக் கூறலொல்லாது. காரியந் தோற்றுஞான்றும் அங்ஙன மாகாஞான்றும் சத்தி, கண்கூடாகப் புலப்படுவ தெவ்வாற்றானு மியைந்திலதென்க. சித்திரிகன் சித்திரிக்குங்கால் சித்திரசத்தி யன்னோன்பாலதாகக் கொள்ளுநரன்றி வரையாவழி யங்ஙனங்கோடலமையுமோ? அன்றே. அற்றாகலின் காரியத்தானே காரணமினைத்தென் றியம்பற்பாலதென்க. காரியமாய புகை காணுநவழிக் காரணமாயதீ யுளதாகக் கூறுநருளரோ? அற்றன்றே. சித்திரிகன் சத்தன், சித்திரம் வரையுமாற்றல் சத்தி, சித்திரங் காரியம்; சித்திரம் வரையுஞான்றுஞ் சித்திரிகனுப சத்தனு

[illegible]

[illegible]

ம், அன்னேன் வரையுஞ் சித்திரமும் கண்கூடாக நிகழ்வதன்றிச் சத்தி கண்கூடன்று; கண்கூடாய காரியங்கொண்டு அங்ஙனமன்றாய காரணத்தைத்துணிவது அநுமானமென்பதாம்; புகையைக்கொண்டு தீயுளதெனக் கோடல் போன்றென்க. அன்னவற்றுன் மண், சத்தி, கடமென்பனவாய இம்மூன்றனுள்ளும் மண்ணுங் கடமுங் கண்கூடாயுள்ளன; சத்தியங்ஙனமன்று. காரியம் கடம்; காரணம் சத்தி. காரியமாய கடவாயிலாகக் காரணமாய சத்தி யுளதென்றனுமானிப்பது புகையுளவழித் தீயுளதாகக் கோடல் போன்றென்க.

இனி "கடமெனற்பாலது சத்தா? அசத்தா?" என்று காரிய காரண வாதத்தான் விவகரிக்குங்கால் யாண்டு மின்றென முடிந்த தாகலின் இது முடிந்தது முடித்தலென்னு முத்திக்கினமென்க. இனிக் கடமேயிலதாயவழி, சத்தியுளதென் றியாண்டைக்கூறலமையும்? புகையைக்காணுத வழித் தீயுண்டென்றி யாவர் கூறுவர்? கடத்தோற்ற முளதெனின் தோற்றம் பொருளென் றமையாதன்றே? தோற்றம் பொருளாங்கால் பனியின் றோற்றப்புகையும் பொருளாக, அதுகாரணமாய்த் தீயுளதெனக் கோடலமையுமன்றோ? தோற்றப் புகையைக்கொண்டு தீயுளதெனக்கோட லெவ்வாற்று னியைந்திலதோ அங்ஙனமேயுள்ளது போன்று தோற்றுங் கடத்தோற்றத்தைக் கொண்டு சத்தி யுளதெனக்கூற லெத்துணையு மியையாதென்க. சத்தாய கண்கூடாக் காண்டலான் சத்தாய அங்ஙனமன்மையை யுணர்வது அனுமானமாகலின், அசத்தாய கடத்தைக்கொண்டு சத்தாய சத்தியை யுணர்வது எத்துணையு மியையாதென்க. எதார்த்த வனுமானத்தான் பொருள் சித்தித்தலல்லது தோற்றவனுமானத்தா னெத்துணையுஞ் சித்தித்த லமையாதென்க. இஃது அனுமானத்தானுய குற்றமேயாம். இதனானே கடமுஞ் சத்தியு மியாண்டு மில்லனவென்றே துணியப்பட்டனவென்க. இங்ஙனமே யொவ்வோர் பொருளையு மாராயுங்கால் சத்தியுங்காரியமுமில்லனவென்றே நிகழ்கினவன்றி யோர் பொருளினின்று மேனைய பொருள்கள் தோன்றுதலெனல் வாளாசழக்கேயென்க.

இந்து.

உலகம் அசத்தா? சத்தா?

இந்த சங்கையைப்பற்றி யாலோசிக்குமிடத்து, உலகத்தினது இலக்கணம் இன்னதென்றும், சத்தின் இலக்கணம் இன்னதென்றும், அசத்தின் இலக்கணம் இன்னதென்றும், முன்னம் வரையறுத்துப் பின் அவ்வுலகம் சத்தின் பாற் படத்தக்கதோ அல்லது அசத்தின் பாற் படத்தக்கதோவெனத் தருக்கித்துப் பாற்படுத்தல் வேண்டும். இங்ஙனம் செய்யாமல் சத்து அசத்துகளை மாத்திரம் நமக்குத்தோன்றிய மட்டும் ஒருவாறு வரையறுத்துவிட்டு, வரையறைப்படுத்தாத உலகத்தைச் சத்தென்றுவது அசத்தென்றுவது தீர்மானித்தலைக்காட்டினும் அந்தக நியாயம் வேறொன்றுளதோ? நிலக்கரி உலோகமா? கல்லா? வென ஆசங்கைநிகழுழி, நிலக்கரி இன்னதென்றும், உலோகம் இன்னதென்றும், கல் இன்னதென்றும் இலக்ஷணசித்தப்பட்டாலன்று இதன் இலக்கணம் இதனோடு பொருத்தம். ஆதலால் அனுதரும சம்பந்த வாற்றலால் இது இதுவேயாம், அதுவாகாது என்று துணிதல்கூடும்.

1886ஹு ஆகஸ்டுமீ 23உ மித்திரனில் வெளியாகிய இந்து

[illegible]

வைப்போலாது, நாம் உலகம் இன்னதென்றும், சத்து இன்னதென்றும், அசத்து இன்னதென்றும் முன்னம் வரையறுத்துப், பின் உலகம் சத்தென்றும் அசத்தென்றும் தீர்மானிப்பாம்.

உலகம், அல்லது வஸ்து அல்லது பூதியம் என்பது தனக்கென ஓர் சொருபமின்றி முக்காலத்துநிசமு மெல்லாச்சொருபங்களுந் தாமாய் குருத்துவம், இபக்கம், ஆகருஷணம், திரிவு முதலிய வற்றை அபின்னமா யாண்டுமுடைய உண்மைப்பொருள். இதுவே சத்தெனறும் சொல்லப்படும்.

இந்த சத்தினுடைய அபாவமே அசத்தாதலாலும், அசத்து யாண்டு மிலதாதலாலும், இல் பொருளுக்கு இலக்கணமுமின்றென்க.

ஆதலால் உலகம் சத்தின்பாற்படுமேயல்லாது சத்திற்குச் சர்வ விரோதமாகிய அசத்தின் பாற்படாது.

ஆனுல் மேற்சொன்ன பத்திரிகையில் உலகம் அசத்து என்று காட்டிய ஸ்ரீமான் இந்துவின் நியாயம் போலியோவெனின முக்காலும் போலியே. அதை ஈண்டுகாட்டுவாம்.

இவ்விந்து "சத்துயாண்டுமுள்ளது,, என்று கூறினரேயல்லது அது இதுவென்று காட்டினரில்லை. சத்துக்கு உதாரணமாகப் படத்தைக்கூறினுலோவெனின், படம் யாண்டு முள்ளதா? படம் காரணமா? காரியமா? காரியமெனின், இவர் கூறிய கடநாஸ்தி நியாயமே இவருக்கு விரோதமாகின்றது. படத்தை வியவகாரிகமாய்க் கூறியதேயல்லாமல் பாரமார்த்திகத்திற்கு அன்று எனின், யாண்டுமுள்ளது பாரமார்த்திக சத்தா? வியவகாரியசத்தா! பாரமார்த்திகசத்தெனின், இலக்கணங்கூறியது ஒன்றற்கும் எடுத்துக்காட்டியது ஒன்றுமாகின்றமையால் பாம்புகடிக்குத் தேள்விஷந்தீருமருந்தளித்தது போலன்றோ இருக்கின்றது. 'அசத்து யாண்டுமிலது, என்று கூறிப், பின்னர்காட்சியைக் காணப்படு பொருளாகவும், சொல்லைப் பொருளாகவும், காட்சி, சொல், ஆகிய இவ்விரண்டையும் பொருளாகவும் மயங்கி உதாரணங் கூறியுள்ளார். இலக்ஷணமெல்லாம் அவற்றை யேற்றுள்ள இலக்ஷியப்பொருளுக்கேயல்லாமல், இல் பொருளுக்கன்றே. இல் பொருளுக்கு உதாரணம் பகர்ந்தது என்ன பயனைக்கருதியோ? மேலும் இவ்வாதி உற்பத்திக்கும் உருமாற்றத்திற்கும் பேதமுணராமல் மயங்கி வாதாடுகின்றுர். உற்பத்தியாவதுமுதற்காரணமில்லாமல் உண்டாவது. உற்பத்தியை வைதிகிகள் சிருஷ்டியென்றுங் கூறுவர் "இல்லது வாராது,, என்ற நியாயம் இதற்கே பொருந்துமாதலால், இதற்கு உதாரணமும் கிடையாது. உருத்திரிதலாவது ஓர் உரு மற்றொருருவாய்த்திரிதல். இதற்கு உதாரணம்கடமே. கடமென்பது ஓர்வகை உருவிற்குத் தமிழ் நாட்டார் சொற்சுருக்கமாய் வைத்துக்கொண்ட கற்பிதப்பெயரேயல்லது வேறல்ல. இந்தகடம் மண்ணுயிருந்தாலும் கடம்தான், பொன்னுயிருந்தாலும் கடம் தான், செம்பாயிருந்தாலுங் கடம்தான், பித்தளையாயிருந்தாலும் கடம்தான். கட உருவம் மாறினும் வஸ்துவாகிய மண், பொன், செம்பு, பித்தளை இவைகள் மாறவும் மாறு, அழியவும் அழியா. ஆதலால்தான் 'உள்ளது போகாது என்னும் நியாயமும் இதற்கே பொருந்தும்.

இன்னும் இவர்கூறிய சத்து அசத்துக்களின் லக்ஷணவியாப்தி தோஷங்களைப்பற்றி விசாரிப்பாம். சத்துக்கு அசத்து சர்வ விரோதமாயின், இவர் சொன்ன இலக்கணங்களில் வியாப்தி தோஷமின்று. சர்வவிரோதமல்லாக்கால், வியாப்திதோஷம்

[illegible]

கூறுதேயமையும். ஆதலால் அவ்விலக்கணங்கள் சர்வவிரோதமா அல்லது வேறுவிரோதமா வென்பதனை நியாயசாத்திரப்பிரமாணத்தால் விளக்கிக்காட்டுவோம்.—

விரோதம் சர்வவிரோதமென்றும், சம்பவவிரோதமென்றும், பாரிசேடவிரோதமென்றும், சகளவிரோதமென்றும் நான்குவகைப்படும். இவற்றுள்,

1. சர்வவிரோதம்	யாண்டுமுள்ளது சத்து ஓர்போதும் இல்லது அசத்து
2- சம்பவவிரோதம்	யாண்டுமுள்ளது சத்து சிலபோதுள்ளது சத்து
3- பாரிசேடவிரோதம்	யாண்டுமுள்ளது சத்து யாண்டுமில்லது அசத்து
4. சகளவிரோதம்	சிலபோதுள்ளது சத்து சிலபோதில்லது அசத்து

மேலே இவர்கூறிய இலக்கணப்படி சத்துக்கும் அசத்துக்கும் உள்ளவிரோதம் சிறப்பாந்தன்மையினதாகிய சர்வவிரோதத்துளடங்காமல் சிறப்பின்மையாகிய பாரிசேடவிரோதத்துளடங்குகின்றமையான், அசத்திற்குக்கூறிய போலி இலக்கணத்தில் வியாப்திதோஷமுண்டாகின்றது. இவ்வியாப்திதோஷத்தை நையாயித்துக்காட்டுவோம்.

எது அசத்தோ அதுயாண்டுமில்லது.
கடம் அசத்து என்றதனால்
கடம் யாண்டுமில்லது.

வனைந்ததற்குப்பின்னும் அழிவுபாட்டிற்கு முன்னும் கடமுண்டாதலால் கடம் யாண்டுமில்லதாய் எங்ஙனமாகும்? கடம் யாண்டுமில்லதல்லாதபோது அசத்தெப்படியாகும்? கடம் யாண்டு முள்ளதுமல்லவாதலால் சத்தும் அன்று. இவர் கூறிய இலக்கணப்படி கடம் சத்தும் ஆகாமல் அசத்தும் ஆகாமல் சங்கரசங்கேதநிலையில் நிற்கின்றது, ஆதலால் இவர்கூறிய அசத்திலக்கணத்தோடு இவரது உதாரணமே முரண்படுகின்றது. உலகத்திலே நையாயிகரெல்லாரும் ஒன்றைக்காரணமென்றும் மற்றொன்றைக்காரியமென்றுங்குறிப்பது சொரூபத்தைநோக்கியேயல்லாமல் வஸ்துவை நோக்கியல்ல. வஸ்துவோ காரணத்திற்கும் காரியத்திற்கும் நியதமாயிருப்பது. மனோபாவனையால் காரணத்தை நோக்குழி காரியமும், காரியத்தை நோக்குழி காரணமும் இன்மையாய்க்காணப்படினும் இவ்விரண்டிற்கும் நியதமாயுள்ளது எதுவோ அது எக்காலத்தும் உள்ளதே; அதுவே சத்தென்பதும், வஸ்துவென்பதும், உலகமென்பதுமாதலால், உலகு அசத்தாதல் ஒருக்காலுமில்லை. இதனைச்சிந்தித்து இந்துவென்னப்பட்ட நமது நண்பர் பின் மறுமொழி பகர்வாராக.

ஹிதோபதேசி.

இங்ஙனம தத்துவவிவேசினி.

ப்ரம்மவித்தியா பத்திராதிப ரவர்கள் சமூகத்திற்கு

ஐயா,—சென்ற செப்டம்பர்மீ 26௨ தத்துவவிவேசினியின்கண் ஹிதோபதேசியார் வரைந்திருக்கும் விஷயத்தை யிம்முறை தங்கள் பத்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டும். மறு பத்திரிகைக்கு அதன மறுப்பு வரைந்தனுப்புவாம்.

இந்து.

கடிதக்குறிப்பு

இந்து- தாமெழுதியபடி தத்துவவிவேசினியில் ஹிதோபதேசியார் வரைந்திருக்கும் விஷயத்தை இம்முறை பிரசுரித்திருக்கிறோம்.

பத்திராதிபர்.

[illegible]

ப்ரம்மவித்தியாபத்திரிகை

பிரதி இங்கிலீஷ்மீ ௩௰. ௨ சிதம்பரத்திற் பிரசுரம் செய்யப்படும்

[illegible] ௧] ௧ அ [illegible] ௫௰௨ [௩ | புத்தகம்-௧] ௧௮௮௬ ஆகஸ்டு ௩௰௨ [இலக்கம் ௩

[illegible]

சந்தா விவரம்

	இந்தியாவிற்கு-				இலங்கைக்கு-		
ஸம்	1-இ	1	12	0	2	4	0
[illegible]	6-இ	1	0	0	1	4	0
[illegible]	3-இ	0	9	0	0	10	0
காபி	1-இ	0	3	6	0	4	0

இவ்வடமொழிப் பத்திரிகையை வைதிக லௌகிக இருதிறத்தாரும் வாங்க விரும்புகின்றனராதலின், இதன் சந்தாவைக் குறைக்கப்பட்டிருக்கின்றது.

ப்ரம்மவித்தியா.

ஸம்ஸ்கிருத பாஷை (தொடர்ச்சி)

அவற்றுள் சில ஈசம், கேனம், கடம் முதலிய உபநிடதங்கள் அந்தந்த மதி பாஷியக்காரர்களால் வியாக்கியானம் செய்யப்பெற்றுள்ளன. அந்தந்த மதஸ்தர்கள் அவரவர்கள்கொண்ட மதமே எல்லாஉபநிடதங்களிலும் உள்ளது எனக்கூறினும், பாரபக்ஷமின்றிப் பார்க்கும் புலவர்க்கு ஒருவிதமான கொள்கையே அவற்றுள் உள்ளதென வெள்ளென விளங்கும். அங்ஙனமன்றே ஒவ்வொரு மதங்களுக்கும் ஒவ்வொரு உபநிடதம் இடங்கொடுக்கும். அந்தந்த உபநிடதங்களை மூலமாய்க்கொண்டு மற்றைய வாக்கியங்களையும் தமது கருத்திற்கிணங்கப் பொருள்படுத்த முயல்வது மதவாதிகளின் வழக்கம். அவர் செய்யும் முயற்சி சிலவிடத்து முற்றுப்பெறும். சிலவிடத்து முயற்சி வீணாகுமேல் விதண்டாவாதம் செய்வது முண்டு. இதுவும் மதவாதிகட் கியல்பே. மற்றுமுள்ள கற்றவரோ பொறுமையை யொழித்து எல்லாவற்றிலும் சமரச புத்தி கொண்டு, கண்டபடி பதங்களை வருத்தாது அவ்வப் பதங்களுக்கு உரிய பொருள்களைக்கொண்டு தத்துவங்களை நன்கு ஆராய்ந்து, ஆனந்தக்களிப்புடன் எக்காலமும் கைவிடாது இவ்வுபநிடதங்களைக் காத்து வருகின்றனர். அதுகொண்டு ஓர் மதவாதி சொல்லும்வழி சேராது, அவ்வுபநிடதங்களுக்கு முக்கியமான பொருள் போனவழி விஷயங்களை எடுத்துப் பொதுவிற் சங்கதி தெரிந்துகொள்ள வேண்டியதின் நிமித்தம், இவ்விடம் எழுத வேண்டிய தொன்றே நமது கடமையாதலின், சிறுபான்மை